SRIRANGAM SRIMATH ANDAVAN ASHRAMAM

SHANTI MEDU, VEERAPANDI PIRIVU, MTP ROAD,COIMBATORE

# Achaarya Vruksham- Special Supplement on Thirukudanthai Desikan



**Thirukudanthai Desikan**

**Sobakruth Purattasi- 2023- Pooradam**

## Articles on Thirukudanthai Desikan

1. Asrama publication
2. Andavan Thiruvadi Parthasarathy Sreenivasan
3. Uttamur Swamy U.Ve.Veeraraghavachariar
4. Payyampaadi Chetlur U.Ve. Srivatsankachariar
5. Ammasatram U.Ve.Seshadriyaarya Mahadesikan

# SRIMAD THIRUKKUDANTHAI DESIKAN

**THIRUNAKSHATRAM: PURATTASI PURADAM (PURVA ASHADHA)**




**Thaniyan**

**śrī kṛṣṇa-deśika-padāmbuja bhṛñga-rājaṁ**

**vedānta lakṣmaṇa-munīndra kṛpātta-bodhaṁ**

**traiyanta-deśika yatīndra śaṭāri-mūrthiṁ**

**gopāla-deśika śikhāmaṇiṁ-āśrayāmaḥ**

**Sri Thirukudanthai Desikan who is also known as Srimad Gopalarya Mahadesikan is the reviver of the Munitraya sampradayam, which owes it origins to Sri Natha Muni, Sri Yamuna Muni and Sri Ramanuja Muni through the line of Srimad Vedanta Desikan. For this reason, Srimad Gopalarya Mahadesikan was awarded the title 'Thirukudanthai Desikan' and another title, 'Munitraya Sampradaya Pravartakar' by the presiding Deity or the divya-desam perumal of Thirukudanthai, Sri Aravamudan Himself.**

**His avataram (divine birth) took place in the year 1700 CE in the Vedic year of Vikrama in the Tamil month of Purattasi under the star Pooradam in Athreya gothram in the lineage or vamsam of Sri Appullar.**

**Sri Appullar was Srimad Vedanta Desikan's maternal uncle, and a descendant of one of Bhagavad Ramanuja's direct disciples, Sri Kidambi Achan.**

**Sri Kidambi Achan was also known as Madapalli Achan, because he was charged with the kainkaryam (service) of cooking in the madapalli (sacred kitchen) of Bhagavad Ramanuja.**

**Srimad Thirukudanthai Desikan's father Sri Kidambi Krishna Suri had named him Gopala Desikan at birth. Gopala Desikan received his pancha-samskaram and veda-adhyayanam from his father. He also learnt tarkam, vyakaranam, mimamsa, Divya-prabhandham, Desika-prabhandham and Desika-stotrams from his father, and thus became an erudite scholar.**

**Sri Gopala Desikan requested the great Vaishnavite preceptor Sakshat Swami to bless him and shelter him as a sishya (disciple). Sakshat Swami was immensely pleased after testing his disciple's jnanam (spiritual knowledge), anushtanam (sacramental practices) and bhakti (devotion to the Lord), and accepted him as a sishya.**

**Sri Gopala Desikan studied Srimad Rahasyatraya Saram, Sri Bhashyam, Gita Bhashyam, Sri Pancharatra Pravrutti, Anushtana Granthas, Srutaprakasika, Tatparya Chandrika, Shatadushani, Tattva-mukta- kalapam, Nyasavidya-darpana and Sri Tattva-siddhanjanam under the holy feet of Sakshat Swami.**

**Sakshat Swami instructed Sri Gopala Desikan to learn Bhagavad-vishayam ( the Irupathi-nalayira-padi commentary on the Thiruvaimozhi of Sri Nammalwar) from his disciple Sri Paduka Sevaka Ramanuja Muni, to whom he had already taught the commentary. As instructed, Sri Gopala Desikan**

studied Bhagavad-vishayam from Paduka Sevaka Ramanuja Muni and became a scholar in that too.

Finally, he prayed to Sakshat Swami and requested him for bhara-samarpanam or ritual surrender. Sakshat Swami was pleased at his request and performed bhara-samarpanam for Sri Gopala Desikan at the sacred feet of Lord Sri Ranganatha through the process known as acharya-nishtai.

When he offered prayers with one of his compositions, Aparyapamrita Dhyana Sopanam, to the Deity of Sri Aravamudan at Thirukkudanthai, the Lord Himself appeared through the archakar (the priest) and awarded him the name, 'Thirukkudanthai Desikan'.

He composed many works including Ahnika Grantham, Sri Desika Sahasranamam, Nikshepa Chinthamani (also known as Sharanaagati Shastra Vivaranam), Sangraha Vyakyanam (collective commentaries) for Kanninun Siruththambu and Thiruppallandu, Sri Jayanti Nirnayam, Aparyatamrita Dhyana Sopanam on Aravamudan (similar to Bhagavad Dhyana Sopanam of Srimad Vedanta Desikan on Lord Ranganatha).

One day Lord Aravamudan appeared in a dream and informed Srimad Thirukudanthai Desikan that three yatis (renunciates) who were the amsha-avataras (partial incarnations) of Sri Nathamuni, Sri Yamuna Muni, and Sri Ramanuja Muni would arrive with a request to become his disciples. The Lord further instructed him to accept them as his sishyas and teach them the esoteric mysteries and teachings of the Munitraya sampradayam, established and passed down by the three great munis: Nathamuni, Yamunamuni and Ramanuja Muni.

Similarly, the Lord appeared in the dream of the three swamis and told them to accept sannyasa or the renounced order, and proceed to Thirukudanthai to become disciples of Srimad Thirukkudanthai Desikan.

**The three Swamis were:**

Sri Srinivasa Mahadesikan of Cheyyanam on the banks of river Thamirabarani
Sri Ranganatha Mahadesikan of Vathiyairuppu, Thirumaliruncholai near Madurai
Sri Vedanta Ramanuja Mahadesikan of Vazhuthur, a small village near Thirukkudanthai.

Srimad Thirukkudanthai Desikan accepted all three as his sishyas and taught them the sampradaya-granthas through the process of kalakshepams.

**One day during the satrumurai ritual conducted during the festival of Adhyayana Utsavam, when Srimad Thirukudanthai Desikan was chanting mangalasasanam prayers, accompanied by his three disciples at the shrine of Aravamudan, the Deity form of the Lord Himself spoke to them and awarded him the title 'Munitraya Sampradaya Pravarthakar'.**

**Srimad Thirukudanthai Desikan instructed his three disciples to return back to their places and conduct sampradaya-pravachanams or traditional-preaching from their respective places. Of these three disciples, it was Srimad Vedanta Ramanuja Mahadesikan, who was chosen to adorn the Andavan Ashramam acharya-pitam as the first acharya, and was called Srimad Vazhuthur Andavan.**

**Srimath Thirukkudanthai Desikan accepted the sannyasa order at the age of 81 years (in the year called Plava in 1781 CE, in the month of Karthigai on the tithi of Krishna-panchami when the star Karthigai was in ascension) with the name Aparyaptamrita Mahadesikan. The very next day, on Krishna-sashti tithi, he departed to adorn Thirunadu under direct instructions from the Lord Himself.**







# TIRUKKUDANTHAI DESIKAN
## PURATTASI POORAADAM
## 13.10.2021




### GOPALARYA MAHA DESIKAN—
### MUNITHRAYA SAMPRADHAYA PRAVARTHAKAR

Purattasi-Pooradam is the thirunakshatram of Srimath Thirukkudanthai Desikan (1700 - 1781) also known as GopAlArya MahAdEsikan. He is an important Acharya in the Munithraya sampradayam. His thanian reads as

**Sri Krishna dEsika PadAmbuja Brunga rAjam**
**VEdAntha lakshmana muneeindra kripatha bOtham**
**Thraiantha dEesika yatheendra satAri moorthim**
**Gopala dEsika sikAmanim Aasrayamaha**
**Srimathe Gopalarya Mahadesikaya Namaha**

Sri Gopala Desikan was born in Aathreya gothram in Sri Appullar's Vamsam (Swami Desikan's maternal uncle). The kootasthar of this Vamsam Sri Kidambi Aachaan (also known as madaippalli Aachaan) was doing the Madaippalli kainkaryam to Sri Ramanuja. Thirukkudanthai Gopala Desikan was the direct and fifteenth descendant of Appullar. Swami's Avatharam took place in Vikrama Varusham (1700) purattasi madham, pooradam star, sukla paksham, navami thithi in dhanur lagnam. Swami received his pancha samaskaram and veda adhyanam from his father Sri Krishna Suri. From his father, he also learnt tharkam, vyakaranam, meemamsam, Divya Prabhandham, Desika Prabhandham & Sthothra paatams of Sri NigamAntha MahA dEsikan and became an erudite scholar.

Sri Gopala Desikan requested Saakshaath swami to bless him and take him as a sishya. Saakshath swami, after testing his gnanam, anushtanam and bhakthi was immensely pleased and blessed him and accepted him as his sishya. Sri Gopala Desikan studied Srimath Rahasyathraya Saaram, Sri Bhaashyam, Geethaa Bhaashyam, Sri Paancharaathra Prabruthi, Anushtaana Granthas, Sruthaprakaasikaa, Thaathparya Chandrikaa, Sathadooshani, Thathva mukthaa kalaabaa, Nyasavidyaa Darpana and Sri Thathva Sidhanjanam under the holy feet of Saakshaath swami. Saakshath swami instructed Sri Gopala Desikan to learn Bhagavath Vishayam from his Satheerthar and disciple Sri Paduka Sevaka Ramanuja muni, who had learnt 24 Ayirappadi earlier from Sri Saakshath swami. As instructed, Sri Gopala dEsikan studied Bhagavath Vishayam from Padhuka Sevaka Ramanuja muni and became a scholar in that too, and requested Sri Saakshaath swami for Bharasamarpanam. Saakshaath swami was very much pleased at his request and performed Prapatti for Sri Gopala Desikan at the sacred feet of Lord Sri Ranganatha through Acharya nishtai.

When he offered prayers with AparyabdhAmritha Dhyana slokam to Lord at Thirukkudanthai, Lord Aravamudhan appeared through archakar and granted the name Thirukkudanthai Desikan

**Other works of swami are ::**

- **Ahniga Grantham**
- **Sri Desika sahasranamam**
- **Nikshepa Chinthamani also known as Saranaagathi Saasthra Vivaranam**
- **Sangraha Vyaakyaanams for Kanninun Siruththambu, Thiruppallandu**
- **Sri Jayanthi Nirnayam**
- **Aparyabdhamritha Dhyana sopanam on Araavamudhan (similar to Bhagavath Dhyana sopanam of Swami Desikan on Lord Ranganatha)**

One day Lord Aparyabdhamudhan appeared in the dream of Thirukudanthai Desikan and told him that three yatheeswas, the Amsa avatharams of Sri Nathamuni, Sri Alavanthar, and Sri Bashyakarar will come and request him to take them as his sishyas and instructed him to accept them as his sishyas and teach them the Munithraya sath-sampradayam, the sampradayam passed down by three munis namely Nathamuni, Yamunamuni and Ramanuja Muni. Similarly Lord appeared in the dream of the three swamis also, and told them to take up Thureeyasramam and become sishyas of Thirukkudanthai Desikan swami. The three swamis were:

1. Sri Srinivasa Maha Desikan of Cheyyanam on the banks of Tamirabarani river.
2. Sri Ranganatha Maha Desikan of Vathiraairuppu, Thirumaliruncholai near Madurai.
3. Sri Vedantha Ramanuja Maha Desikan of Vazhuthur, a small village near Thirukkudanthai.

Thirukkudanthai Desikan swami took all three of them as his sishyas and taught them all the granthas through upadesams and kalakshebams. One day during Adhyayanothsavam Sarrumurai time when swami, along with the three sishyas did mangalasaasanam at Amudhan sannidhi, Lord Amudhan through Archamukam, awarded the thirunamam "MUNITHRAYA SAMPRADHAYA PRAVARTHAKAR" to Srimath Thirukkudanthai Desikan. Swami accepted it with humility saying, "Naayindhen, DhanyOsmi". Swami instructed the yatheeswaras to do sampradhaya pravachanam from their respective places. The yatheeswaras returned back to their villages.

Srimath Thirukkudanthai Desikan led a life of Acharya in gruhasthashrama for almost all of his life like Swami Desikan. He took up sanyasam at the age of 81 years (In Plava year 1781, Karthigai month on Pushya star-Krishna panchami) with the name Aparyabdhaamridha Maha Desikan. The very next day, in Plava varusham Karthigai month- Krishna sashti (1781 Nov/Dec) Srimath Thirukkudanthai Desikan breathed his last at Thirukkudanthai and adorned Thirunadu

Courtesy:: Srimath Andavan Thiruvadi, Perungadambanur Parthasarathy Sreenivasa
(of Besant Nagar,Chennai)

ஸ்ரீ:

ஸ்ரீமதே கனகவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ந தைவம் தேஶிகாத் பரம்   தேஶிகோக்தே: பரம் நாஸ்தி   ந பரம் தேஶிகார்ச்சனாத்

ஸ்ரீதேஶிகனை வாசிப்போம்   ஸ்ரீதேஶிகனையே ஶ்வாஸிப்போம்

---

## முநித்ரய ஆசார்யரான திருக்குடந்தை தேஶிகன்

(ஸ்ரீமதுபயவே. அபிநவதேஶிக. உத்தமூர். வாத்ஸ்ய வீரராகவார்ய மஹாதேஶிகன்)

==========================================================================================

**ஸ்ரீ க்ருஷ்ணதேஶிக பதாம்புஜ ப்ருங்கராஜம்**
**வேதாந்தலக்ஷ்மணமுநீந்த்ர க்ருபாத்த போதம் |**
**த்ரய்யந்த தேஶிக யதீந்த்ர ஶடாரி மூர்த்திம்**
**கோபாலதேஶிக ஶிகாமணிம் ஆஶ்ரயாம: ||**

இந்த ஸ்வாமி ஆத்ரேய வம்சத்தில் மஹாப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீக்ருஷ்ணஸூரிகளுக்குத் திருக்குமாரராக ராயம்பேட்டை என்னும் அக்ரஹாரத்தில் விக்ரம ஸம்வத்ஸரம் புரட்டாசி சுக்லபக்ஷ நவமி திங்கட்கிழமை திருப்பூராட நக்ஷத்திரத்திலே தநுர் லக்நத்திலே அவதரித்தவர். ஸ்வப்நத்தில் ஸ்ரீநிவாஸனுடைய நியமனத்தால் ஸ்ரீக்ருஷ்ணஸூரிகள் தேவிகளோடு ப்ரஹ்மோத்ஸவம் ஸேவிக்கத் திருவிண்ணகரப்பன் ஸன்னிதிக்கு எழுந்தருளினபோது அங்கு இரவில் ஸ்வப்நத்தில் கண்டை(திருமணி)யோடு சேர்ந்த க்ஷீரத்தை க்ருஷ்ணஸூரிக்கு அளித்ததாகவும் க்ருஷ்ணஸூரிகள் தாமும் தேவிகளும் அதை உட்கொண்டதாகவும் கண்டு தேவிகளிடம் சொல்லி வியந்ததாகவும், அதுமுதல் கர்பதாரணமாய் ஸ்வாமியின் அவதாரமென்றும் பணித்துள்ளார்கள். யதாகாலம் எல்லாம் நடந்து ஸர்வவேத சாஸ்த்ராப்யாஸத்திற்குப் பிறகு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்திருப்பதால் "ஸ்ரீரங்கம் ஸ்வாமி" என்றும் "ஸாக்ஷாத் ஸ்வாமி" என்றும் ப்ரஸித்தரான "ஜ்ஞாந வைராக்ய

அநுஷ்டாந சேவதி" வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன் திருவடிகளை ஆச்ரயிக்கச் சென்று ஸ்வாமியினால் விசேஷமாகக் கடாக்ஷிக்கப்பெற்று ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகாதிகளைப் போல் ப்ரௌட ஸரள ஸர்வதேஶிக ஸ்ரீஸூக்திகளையும் அதிகரித்து ஸாக்ஷாத் ஸ்வாமி அருளிய க்ரந்தங்களையும் ஸேவித்த பிறகு ஸாக்ஷாத் ஸ்வாமியால் தம்மோடு தம் ஆசார்யரான ரங்கநாத மஹாதேசிகன் திருவடிகளை ஆச்ரயித்ததால் தமக்கு ஸதீர்த்யராய் தாம் அருளிச்செய்த பகவத்விஷயம் இருபத்தினாலாயிரப்படியைத் தம்மிடம் அதிகரித்தவருமான ஸ்ரீபாதுகா ஸேவக ராமாநுஜ ஸ்வாமியினிடத்தில் பகவத்விஷயங்களும் க்ரஹிக்க நியமித்தபடியால் அப்படியே க்ரஹித்தார். தம்முடைய பரத்தை ரங்கநாதன் திருவடிகளில் தம் ஆசார்யன் ஸமர்ப்பிக்கத் தாம் ஆசார்யநிஷ்டராய் ஸ்ரீரங்கத்திலிருந்து திரும்பி எழுந்தருளினார். காலக்ஷேபத்திற்கு எழுந்தருளுவதற்கு முன் தம்முடைய திருமாளிகையைப் பிறருக்கு அளித்துவிட்டபடியால் ஆராவமுதன் ஸந்நிதிக்கு எழுந்தருளி அங்கே ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கத் திருவுள்ளமாய் ஆராவமுதனுடைய துளஸீவநத்தில் ஒரு பாகத்தில் பர்ணசாலை கட்டிக்கொண்டு ஹயக்ரீவ மந்த்ர ஜபத்தினால் விசேஷ ஸித்தி பெற்று உஞ்சவிருத்தி செய்துகொண்டு க்ரந்த ப்ரவசநம் செய்துவந்தார். அந்த ஸமயத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸாக்ஷாத் ஸ்வாமி ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு ஸாராஸ்வாதிநீ என்னும் வ்யாக்யாநத்தை ஸாங்க ப்ரபதநாதிகாரம் வரையில் அருளிச்செய்து திருமேனியில் சக்தி குறைந்துவிட்டபடியால் திருக்குடந்தை தேசிகனை வருவித்து நாம் இது வரையில் எழுதிய சாயையிலே அதிகாரார்த்தங்களெல்லாம் படிப்படியாக அவதாரிகையில் வரும்படியும் பதார்த்த சோதநத்தோடு வாக்யஸ்வரஸார்த்தமும் கருத்தும் தெளியும்படியும் மேலே ஓர் அதிகாரத்திற்கு எழுதிக்காண்பியுமென்று நியமிக்கத் திருக்குடந்தை தேசிகனும் அவ்வாறே செய்து விஜ்ஞாபித்தபோது போர உகந்து பூர்ணமாகக் கடாக்ஷித்துப் பூர்த்தி செய்ய நியமித்தாயிற்று.

அதனால் திருக்குடந்தைதேசிகன் மூலம் இந்த க்ரந்தம்போல் திருப்பல்லாண்டுக்கும், கண்ணிநுண்சிறுத்தாம்புக்கும் வ்யாக்யாநமும் ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா வ்யாக்யாநமாக ஆஹ்நிக க்ரந்தமும் ச்ராத்தப்ரயோகாதிகளும் அருளப்பெற்றன. உபநிஷத்பாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீஜயந்தீ நிர்ணயத்தை விரித்துரைக்கவேண்டுமென்று உபநிஷத் பாஷ்யகாரரின் சிஷ்யரான ரங்கநாத ஸ்வாமி திருவுள்ளம் பற்றியிருந்தபோது அந்த ஸ்வாமியின் சிஷ்யர்களான ஸ்ரீ வீரராகவாசார்யர், பெரிய பரகால ஸ்வாமி, வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி என்றாற்போன்ற பலரில் வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி சிஷ்யராய் பரகால ஸ்வாமியிடம் துரீயாச்ரமம் பெற்றவருமான மன்னார் ஸ்வாமி என்பவர் ஜயந்தி நிர்ணயம் எழுதியிருக்க மீண்டும் அதன் அர்த்தத்தை ஸ்தாபிப்பதற்காக

ஸ்ரீஜயந்தீ நிர்ணயம் ஸாதித்தபடி. தேசிகன் அவதரித்திருந்தபோது ஸேவிக்க பாக்யமற்ற நாமெல்லோரும் இப்போது இங்கே ஸேவிக்கிறோம் என்று கொண்டாடினர். ஆழ்வார்கள் விசேஷமாக அநுபவிக்கத் திருவாய்மொழி ப்ரசாரத்திற்கு மூலகாரணமான ஆராவமுதாழ்வானை மற்ற அர்ச்சைகளைப் போலே ஸேவித்து ஈடுபடவில்லையே என்கிற குறை தீரத் திருக்குடந்தை தேசிகனாக அதே தேசிகன் அவதரித்தார். அதனாலே அதிக காலம் திருக்குடந்தையிலே எழுந்தருளி இருந்தபடியும், ஆத்ரேய தேசிகன் ராயம்பேட்டை தேசிகன் என்றவாரின்றி திருக்குடந்தை தேசிகன் என்றே புகழ் பெற்றதும், அபர்யாப்தாம்ருத த்யாந ஸோபாநம் என்கிற க்ரந்தம் அருளிச்செய்யும்படியும் விசேஷ தேஜஸ்ஸோடு விளங்கியிருந்த-படியால் மூன்று யதிகள் சேர்ந்து ஸ்வாமி திருவடிகளை ஆச்ரயித்து காலக்ஷேபாதிகள் செய்துகொண்டனர். அவர்கள் இன்னாரென்று கீழே குறிக்கப் பெற்றது. உஞ்சவ்ருத்தி செய்தருளும் ஸ்வாமி மேல் செலவிற்காக எங்கும் ப்ரதிக்ரஹம் செய்யாமல் தம்முடைய இரண்டு மூன்று தென்னை மரங்களின் காய்களை விற்றே கொள்ளுகிற வழக்கம். ஒரு ஸமயம் அங்கு வ்யாபகனான பாளையக்காரன் தன் பெண் கல்யாணத்திற்காக அதிகார பலத்தாலே மற்றவர்களிடம் இருந்து போல் ஸ்வாமியினுடைய தென்னங்குலையையும் கேழ்க்காமலேயே ஆள்கள் மூலமாகக் கொண்டுபோய்விட்டான். இம்மூன்று முனிவர்கள் காலக்ஷேப காலத்தில் இவ்விஷயம் தெரிந்து தாங்கள் அவனிடம் போய்வருவதாக விஜ்ஞாபித்தனர். அதற்கு உங்கள் ஆச்ரமத்திற்குத் தக்கவாறு நீங்கள் நடந்துகொள்ளுங்கள். வீண் ப்ரயாஸை வேண்டாமென்று ஸ்வாமி அருளியபடி. ஆனாலும் கைங்கர்யத்தைச் செய்வதே சிஷ்ய தர்மமென்று அவனிடம் சென்று தூரத்தில் நின்று அவனுக்குத் தெரிவித்தனர். அவனும் ஓடி வந்து தெரியாமல் செய்துவிட்டார்கள்; காய்களைத் திருப்பிவிடலாம் என்றால் எவை அம்மரத்துக் காய்கள் என்று தெரியாதே என்றனன். குலைகளிருக்கும் இடத்திற்கு நாங்கள் வருகிறோம். எங்களுக்குத் தெரியும். நாங்கள் அவற்றை எடுத்துக்கொள்கிறோம் என்றார்கள் இவர்கள். அப்படியே அவன் ஸம்மதித்ததால் ஸ்வாமியின் சொத்தை ஸ்வாமியிடம் சேர்த்தார்கள். இது இவர்களுடைய கைங்கர்யம். ஸ்வாமியினுடைய ஆஜாநஸித்தமான ஆசார பூர்த்தி எங்குமிருந்திராது. ஸ்வாமிக்கு நெருங்கின ஜ்ஞாதியாய் ஸர்வசாஸ்த்ர பாரங்கதராய் பல க்ரந்தங்களும் எழுதியவராய் ச்லேஷயமக கவிச்சக்ரவர்த்தியாய் ஸுப்ரஸித்தரான அஸ்தோகாத்வரீ வேங்கடாத்வரி என்பவர் ஸ்வாமியினுடைய மேன்மைக்கு மகிழ்ந்து ஒரு ஸமயம் அன்புடன் அணைத்து அநுக்ரஹித்தாராம். அவர் அப்பால் சென்ற பிறகு, சிறிது நாழிகை கழித்து லௌகிக ரீதியில் இருக்கக்கூடியவர் ஸ்பர்சித்துவிட்டாரேயென்று ஸ்வாமி நீராட்டம் செய்ததாகவும் அதைக்கேட்டு மீண்டும் வந்து ஆசாரத்தைக் கண்டு

கொண்டாடினாரென்றும் கூறுவர். மஹா பண்டிதராய் வ்ருத்த சிரஸ்ஸுமாய்ப் பல பழைய சரித்ரமெல்லாம் தெரிந்தவராய் எழுந்தருளியிருக்கும் மலையாங்குளம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி எழுதியனுப்பிய பலவற்றில் இதைப்பற்றி ப்ரஸ்தாவம் செய்து ஸ்வாமி நீராட்டத்திற்குப் புறப்பட்டதாகவும், அது தகாது; அவர் மிக்க மஹான் என்று ஸாக்ஷாத் ஸ்வாமி ஸாதித்ததாகவும் அதனால் ஸ்நாநம் செய்யவில்லை என்றும் எழுதியிருக்கிறார். எப்படியும் ஸ்வாமியினுடைய பரிசுத்தி நன்கு விளங்குகிறது.

திருக்குடந்தையில் சக்ரபாணி ஸந்நிதிக்கு ஸ்வாமியின் வார்த்தகத்தில் விசேஷமாக ஸம்ப்ரோக்ஷணம் நடந்தபோது ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற மூர்த்திக்கு மஹாபாகவத கரஸ்பர்சம் பண்ணிவைப்பது அவசியம் என்கிற ஸ்ரீபாஞ்சராத்ர தர்சநார்த்தத்தை அனுஷ்டிப்பதற்காக எல்லோரும் ஸ்வாமி திருவடிகளில் தண்டனிட்டு ஸ்வாமிக்கு மேம்பட்ட பாகவதர் உலகிலில்லை. ஸ்வாமியினுடைய ஸ்பர்சத்தால் மூர்த்தியில் பகவத் ஸாந்நித்யம் அதிகமாகவேண்டும் என்று விஜ்ஞாபித்து நிர்பந்தித்தனர். ஸ்வாமி அதை முதலில் இசையாமல் பின்னே இசைந்து எம்பெருமானை ஸம்ச்லேஷித்து, தாரை தாரையாக ஆநந்த நீர் பெருக்கி ஆராவமுதாழ்வானின் ஆநந்தாநுபவத்திலே ஆழ்ந்தனர். ஸ்வாமிக்கு ஒரு குமாரத்தி இருந்தனர். திருக்குடந்தையில் இளையவில்லியார் வம்சத்தில் வேங்கட வீரராகவாசார்யர் குமாரரான ஸ்ரீநிவாஸாசார்யருக்குக் கன்யகாதாநம் செய்ததாகவும், தௌஹித்ரராகப் பிறந்து பரமைகாந்தியான வேதாந்தாசார்ய ஸ்வாமி ஸன்னிதியில் ஆச்ரயித்து ஸ்வாமி திவ்ய சரித்ரத்தைப் பூர்ணமாக ஸாதித்திருப்பதாகவும் அதை அநுஸரித்துப் பின்னுள்ளார் சரித்ரவிஸ்தாரம் செய்ததாகவும் தெரிகிறது. ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்கள் உத்தர ஸாராஸ்வாதிநீ, நிக்ஷேப சிந்தாமணி, ஆஹ்நிகம் முதலானவை. ஸ்வாமி காலத்திலிருந்து தான் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு முநித்ரய ஸம்ப்ரதாயமென்று வழங்கலாயிற்று. சிலர் முநித்ரய ஸம்ப்ரதாயமென்பதற்கு நாதமுநி யாமுநமுநி ராமாநுஜமுநி என்கிற முநித்ரய ஸம்ப்ரதாயமென்று கூறுவர். அப்போது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் முழுமையும் முநித்ரய ஸம்ப்ரதாயமாகும். அப்படியாகில் பாட்டுக்குரிய பழையவர் மூவரான பொய்கைமுநி பூதத்தார் பேயாழ்வார் என்றவர்களைக் கொள்ளலாமே என்பர் சிலர். ஆண்டவன் ஸம்ப்ரதாயத்திலே நாதாதிமுநிகளைக்கொண்டு முநித்ரயமாகச் சொல்லி இருக்கிறார்களே என்னில் அவர்கள் அவ்வாறு கூறவில்லையே. பகவந் நாதமுநி பகவத் யாமுநமுநி பகவத் ராமாநுஜமுநி ரூபமுநித்ரய என்றுதானே சொல்லுகிறார்கள். அதற்குத் திருக்குடந்தை தேசிகனை ஆச்ரயித்த மூன்று முநிகள் நாதாதி முநிகளுடைய அம்சம் என்று தானே பொருள். இந்த முநித்ரயத்தால் இதற்கு

விசேஷ வாசியென்ன என்று கேள்வி வராமைக்காக அவர்களை மூன்று பரமாசார்யர்களின் அம்சாவதாரமானவர்கள் என்று புகழ்ந்திருக்கிறது. இல்லையேல் அஹோபிலமடத்து முநிவர்கள் பலருக்கு ஆசார்யர்களாயிருக்க, அம்முநிவரில் ஆதிவண்சடகோப ஸ்வாமி, த்ருதீய பராங்குச முநி, ஷஷ்டபராங்குச முநி என்கிற முநித்ரயத்தை மட்டும் ஆசார்யர்களாகக் கொண்ட இந்த ஸம்ப்ரதாயத்தை முநித்ரய ஸம்ப்ரதாயம் என்றும் சொல்லலாம். ஷஷ்டபராங்குச ஸ்வாமிக்குப் பிறகு அஹோபிலமட ஸம்பந்தமிராத ஸ்வயமாசார்யர்களின் பரம்பரையிலும் உபநிஷத் பாஷ்யகாரர், அவருடைய சிஷ்யரான ரங்கநாதஸ்வாமி, அவருடைய ப்ரசிஷ்ய சிஷ்யரான மற்றொரு ரங்கநாதஸ்வாமி என்றிப்படி ஸாக்ஷாத் ஸ்வாமிக்கு முன்னமே ஒரு முநித்ரயமிருந்தது. உபநிஷத்பாஷ்யகாரர் ஸ்தாபித்த ஜயந்தீ நிர்ணய ப்ரகாரத்தை அவருடைய சிஷ்யரான ரங்கநாதஸ்வாமி ஆதரித்து அதைத் தன் ப்ரசிஷ்யரான மன்னார் ஸ்வாமி மூலம் ஸ்தாபித்தபடியால் அநுஷ்டாநத்தில் ஸ்ரீஜயந்தியில் பேதம் இந்த முநித்ரயத்தால் வளர்ந்ததென்று இதை ப்ரதாநமாகக் கொண்டு முநித்ரய ஸம்ப்ரதாயம் என்றும் சொன்னபடி. உண்மையில் திருக்குடந்தை தேசிகனுக்குப் பின்னாலேயே முநித்ரய ஸம்ப்ரதாயம் என்ற ப்ரஸித்தி வந்திருக்கிற-படியால் திருக்குடந்தைதேசிகனே பாஞ்சராத்ரரக்ஷையை அநுஸரித்து நித்யகர்ம அநுஷ்டான சிக்ஷணம் செய்து ஆஹ்நிகமருளிச்செய்ததால் அதன்படி ஆசாரத்திலும் ப்ரபத்த்யநுஷ்டாநாதிகளிலுமுள்ள பெருமையைக் கருதி முநித்ரய ஸம்ப்ரதாயம் என்றும் வழங்கினார்களென்று தெரிகிறது. ஸ்வாமி இவ்விபூதியில் எண்பத்தி மூன்று திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்ததாகவும் வடதேச யாத்ரை செய்ய விருப்பமிருந்தும் திருமலை வரையில் சென்று அதற்கு உத்தர பாகத்தில் சென்றால் அடியோடு ஆசாரலோபமே என்றஞ்சித் திரும்பித் திருக்குடந்தையிலேயே எழுந்தருளி இருந்ததாகவும் ப்லவ ஸம்வத்ஸரத்தில் ஊர்ஜ மாதம் க்ருஷ்ண ஷஷ்டியில் பரமபதித்ததாகத் தெரிகிறது. ஸ்வாமி ஓர் உரு காலக்ஷேபம் ஸாதிக்குங்காலத்தில் ஒரு ஸர்ப்பம் படமெடுத்து வெகுநாள் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் ஒருநாள் அது துடிப்பதைக் கண்ட ஸ்வாமி இரக்கத்துடன் அதற்கு உபாயாநுஷ்டாநம் செய்து பாகவத தீர்த்தத்தால் ப்ரோக்ஷித்ததாகவும், அதன்பிறகு அதற்கு தேஹவியோகம் ஏற்பட்டதால் பூர்வஜந்ம ஸுக்ருதத்தாலே மோக்ஷத்திற்காக வந்து அண்டின ஒரு ஜ்ஞாநியான ஜந்மாந்தர வாசனையுள்ள ஜீவன் என்று எல்லோரும் ஸாதித்தனர்.

**நன்றி:**

1. ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமீ த்விஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவாங்க மாஸ ஸ்வாதீ திருநக்ஷத்ர மலர் - 1 (சித்திரை ஸ்வாதீ - 2016).
2. Veda Dharma Samrakshana Sabha, www.vdssabha.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே கனகவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ந தைவம் தேஶிகாத் பரம் தேஶிகோக்தே: பரம் நாஸ்தி ந பரம் தேஶிகார்ச்சனாத்

ஸ்ரீதேஶிகனை வாசிப்போம் ஸ்ரீதேஶிகனையே ஶ்வாஸிப்போம்

# ஸ்ரீமத் திருக்குடந்தை தேஶிகன் வைபவம்

(ஸ்ரீமதுபயவே. மஹாமஹோபாத்யாய. மஹாவித்வான்.
பையம்பாடி. சேட்லூர். வாஸுதேவ. ஸ்ரீவத்ஸாங்கார்ய மஹாதேஶிகன்)

==========================================================================================

ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்குப் பிறகு நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைச் சிறப்பாகப் பேணிக்காத்தருளிய மஹான் ஸ்ரீதிருக்குடந்தை தேசிகன் என்னப்பட்ட ஸ்ரீமத் கோபாலார்ய மஹாதேசிகன். இம்மஹான் தமது ஆசாராநுஷ்டாநாதிகளாலும், க்ரந்தங்கள் மூலமாகவும் சிஷ்யர்கள் மூலமாகவும், பூர்வாசார்ய க்ரந்த ஸம்ரக்ஷணங்களில் முக்யமானதான அவர்கள் நூல்களுக்கு உரையிடுதல் - அவற்றின் கருத்துக்களைச் சுருக்கிக் காட்டுதல் - அவற்றைக் குறை கூறியவர்களை அடக்குதல் முதலானவைகள் மூலமாகவும் நம் ஸித்தாந்தத்தை விரிவாகப் பாதுகாத்து வளர்த்தருளினார்.

## அவதாரம்

திருக்கண்டியூர் என்ற திவ்யதேசம் திருமங்கை மன்னனால் மங்களாசாஸனம் செய்யப்பட்டதாகும். "பிண்டியார் மண்டை ஏந்திப் பிறர் மனை திரிதந்துண்ணும் உண்டியான் சாபம் தீர்த்த ஒருவனூர் உலகமேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை" என்ற பாசுரத்தில் ஆறு திவ்யதேசங்கள் குறிக்கப்பெற்றன. இவற்றில் முதலில் குறிக்கப்பெற்றதும், 'உலகமேத்தும் கண்டியூர்' என்று அடைமொழி இட்டுக் குறிப்பிட்டுக் காட்டப்பெற்றதும் திருக்கண்டியூரே. மேலும் இப்பாசுரத்தில்

குறிப்பிட்ட சிவன், பிரமனின் மண்டை ஓட்டை ஏந்தி பிக்ஷாடனர் ஆன வரலாறும் இவ்வூரிலேயே நிகழ்ந்தது. இதற்குச் சான்றாக இவ்வூரில் பிரமசிர:கண்டீசர் என்பதாய் சிவன் தனது தந்தையின் தலையைக் கொய்தது விளங்கப் பெயர் பெற்றதும், எங்கும் இல்லாதபடி பிரமனுக்குத் தனிக்கோயில் உள்ளதும் குறித்துக்கொள்ளத்தக்கது இவ்வளவையும் கொண்டு ஆழ்வார் இவ்வூருக்கு உள்ள ஏற்றத்தைக் கொண்டு "உலகமேத்தும் கண்டியூர்" என்றார். கண்டியூர் என்றதே பிரமனின் தலையைக் கண்டித்த இடமானது பற்றி ஏற்பட்டதென்பர். இது இருக்கட்டும். இத்தகைய "உலகம் ஏத்தும் கண்டியூர்" மற்றும் ஓர் வகையில் உலகமேத்தும் நிலையை அடைந்தது. அது எப்படி? என்றால் - நமது ஆசார்ய ஸார்வபௌமனான திருக்குடந்தை தேசிகன் அவதரித்த ஸ்ரீக்ராமம் இக்கண்டியூருக்கு அண்மையில் காவிரியில் வடக்குக் கரையில் அமைந்த ராயம்பேட்டை என்கிற அக்ரஹாரத்தினால். இந்த ராயம்பேட்டை அக்ரஹாரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூலவர் திருநாமம் வரதராஜன். உத்ஸவர் ராஜகோபாலன். இந்த ஊர் தஞ்சை மன்னர்கள் காலத்தில் மைசூரிலிருந்து, துருஷ்கர் தொந்தரவுகளால் அகதிகளாய் வந்த ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்களுக்காக ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட அக்ரஹாரமாகும். மைசூரிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் தாங்கள் முன் வசித்த ஊரிலுள்ளபடி ஸ்ரீவரதராஜனை (மூலவர்) பாரதிஷ்டை செய்து ஊரை நிறுவினர். பிறகு ஸ்ரீ ருக்மிணீ ஸமேதரான ஸ்ரீராஜகோபாலன் ஒரு மஹானுக்குத் தாம் காவிரிக்கரையில் இவ்வூருக்கு அருகில் மணல் அடியில் உள்ளதை "நிமித்த ஸ்வப்நாத்யைரபி" என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த வகையில் கனவில் தெரிவித்தருள, அதன்படி அவரைக் கொணர்ந்து உத்ஸவமூர்த்தியாக பரதிஷ்டை செய்து ஆராதித்துவந்தனர். உத்ஸவமூர்த்திகளுக்கு உரிய உபயநாச்சிமார்களில் இடதுபுறம் இருக்கவேண்டிய தேவி எவ்வளவு தேடியும் காணக்கிடைக்காதபடியால் புதிய ஸத்யபாமை = பூதேவி மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்தனர். உத்ஸவமூர்த்தியான ஸ்ரீகோபாலன் திருமேனி எவ்வளவு ப்ராசீனமானது - என்பது நேரில் ஸேவித்தவர்களுக்கே தெரியவரும். திருக்கோவலூர் உத்ஸவர் எவ்வளவு ப்ராசீனமானவரோ - முதலாழ்வார்கள் காலம் தொடக்கமாய் - த்வாபரயுகம் முதல் ஸேவை ஆனவர் அன்றோ - அப்படி இங்கும் ஸேவை ஆகிறார். இந்த எம்பெருமான் கோபாலன்.

இந்த அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீக்ருஷ்ணஸூரி என்ற மஹானுக்கு ஸ்ரீஒப்பிலியப்பனின் திருவருளால் அவரது அம்சமாகவும், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனின் அம்சமாகவும் இரண்டாவது குமாரராய் அவதரித்தவரே நம் ஸ்ரீகோபால தேசிகன். மேற்கூறிய ராயம்பேட்டை உத்ஸவரின் திருநாமமே இவருக்கு அமைந்தது. அவதாரம் விக்ரம வருடம், புரட்டாசி மாதம், பூராடம் திருநக்ஷத்ரம்,

சுக்லபக்ஷம், நவமி திதி, தனுர் லக்னம், அதாவது இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு. தமது திருத்தகப்பனாரிடம் முறைப்படிப் பஞ்சஸம்ஸ்காராந்தமான ஸம்ஸ்காரங்களும், வேதாப்யாஸமும், காவ்ய நாடக பாகங்களும், ஸாமாந்ய சாஸ்த்ரங்களும் க்ரஹித்தார்.

## வேதாந்த காலக்ஷேபம்

பிறகு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்து அக்காலத்தில் வியக்கத்தக்க முறையில் வேதாந்த ப்ரவசனம் செய்தருளிவந்த "ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி" என்று ப்ரஸித்தரான ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேசிகன் திருவடிவாரத்தில் வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் செய்தருளியபடி, அந்த ஸ்வாமி திருநாராயணபுரம் - (மேலக்கோட்டை) ஸமீபம் கொண்டல் என்ற அக்ரஹாரத்தில் ஸ்ரீபாஷ்யகாரருக்கு மாதுகரம் ஸாதித்தருளின ஸ்ரீமடைப்பள்ளியாச்சான் திருவம்சத்தில் அவதரித்தவர். அவர் ஜனித்த தினம் ஸ்ரீபாஷ்யகாரரின் திருநக்ஷத்ரம் - சித்திரை திருவாதிரை. வாசலில் ஸ்ரீபாஷ்யகாரர் வீதி உலா நடைபெறுகிறது. உள்ளே இவர் ஜனனம். அவர் பாட்டனார் பெரும் தைவஜ்ஞர் = ஜ்யோதிஷர். தத்கால க்ரஹநிலைகளை ஆராய்ந்து, "வெளியே ஒரு யதீஸ்வரர்! உள்ளே ஒரு ஆண்டி!" என்றாராம். அது அப்படியே பலித்துவிட்டது. ஸ்ரீபாஷ்யகாரரின் அவதார மாதத்தில் அதே திருநக்ஷத்ரத்தில் இவரும் அவதரிக்கவே அதே திருநாமம்! அதேபோல் வாழ்க்கை அமைந்தது. "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்ஸ்வ" என்ற ரங்கநாதனது நியமனம் இவரிடமும் பூர்ணமாய்ப் பலித்தது. ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துவந்த காலத்தில் தான் நமது திருக்குடந்தை தேசிகன் அந்த மஹானை ஆச்ரயித்து வேதாந்த க்ரந்த காலக்ஷேபங்களைச் செய்தது. நமது திருக்குடந்தை தேசிகனுடைய முன்னோர்களும் மேற்படி கொண்டல் அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர்களே. துருஷ்கத் தொல்லைகளால் இடம் பெயர்ந்து முன்பே இங்கு வந்தவர்கள். இருவரும் தாயாதிகளே. பிறகு தமது மற்றொரு சிஷ்யரான ஸ்ரீபாதுகா ஸேவக ஸ்ரீராமாநுஜ ஸ்வாமி என்பவரிடம் பகவத் விஷயத்தைக் காலக்ஷேபம் பண்ணும்படி நியமித்தாயிற்று. திருக்குடந்தையிலேயே எழுந்தருளியிருந்த தமது மற்றொரு சிஷ்யரும், ஸ்ரீரஹஸ்யத்ரயஸார காரிகைகளுக்கு "காரிகா தர்ப்பணம்" என்ற ஸம்ஸ்க்ருத உரை - ஸ்ரீஸ்துதிக்கு விரிவான ஸாம்ப்ரதாயிகமான ப்ராமாணிகமான உரை எழுதியவரும் மற்றும் பல நூல்களை எழுதியவரும் (இவரது நூல்கள் அச்சுக்கு ஏங்கிச் சென்னை அரசினர் ஓலைச்சுவடி நூலகங்களில் தவம் கிடக்கின்றன) வித்வானுமான "காரிகா தர்ப்பணம் அண்ணா" என்ற மஹானிடம் சிந்தனை செய்யும்படியும் நியமித்தாயிற்று. அதன்படியே நம் ஸ்வாமியும் அதிகரித்தருளினார். ஆஹ்நிக நூலில் திருவஷ்டாக்ஷர ஜபம் செய்யும்

ப்ரகரணத்தில் மேற்படி காரிகா தர்ப்பணத்திலிருந்து பல சுலோகங்களை எடுத்து உதாஹரித்தருளினார்.

## கிரந்த நிர்மாணம்

ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யாநுஷ்டானம் செய்யும் முறையில் முக்யமானது திருவாராதனம். இதனை இஜ்யா என்பர். இதன் ப்ரயோகத்தை ஸ்ரீபாஷ்யகாரர் தமது நித்யம் என்னும் கிரந்தத்தில் விரிவாக அருளினார். ஸ்ரீபாஷ்யகாரரின் எல்லா க்ரந்தங்களுக்கும் விளக்கமாய் ஸம்ஸ்க்ருதத்தில் உரை எழுதிய மஹான் ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஒருவரே. வேதாந்த ஸாரம், வேதாந்த தீபம் இரண்டுக்கும் முன்னோர்கள் உரையிடும் வழக்கமில்லை. ஏன்? எனில் நூலின் பெருமை அளவிடற்கரிதாயினும் அளவு சிறியதானமையால் - தீப - ஸாரங்களே போதும் என்ற முடிவுக்கு வந்து நாளடைவில் ஸ்ரீபாஷ்யம் ப்ரசாரத்திலிருந்து மறையத் தலைப்படக்கூடும் என்பதே காரணம். ஸ்ரீபாஷ்யத்திற்கு விரிவான உரை எழுதிய ஸ்ரீஸுதர்சனஸூரி அதே ஸ்ரீபாஷ்யத்திற்குத் தான் சுருக்கமான உரையாகிய ஶ்ருதப்ரதீபிகை என்பதை அருளினார். சுருங்க ஸித்தாந்தம் தெரிந்துகொள்ளவேண்டுமாயினும் ஸ்ரீபாஷ்யத்தின் மூலமே தெரிந்துகொள்ளவேண்டும் - என்பதே அவர் திருவுள்ளமாகும். ஆகவேதான் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிய ஐந்து வித கட்டளைகளில் முதலாவதாக "பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்" என்பது முதலில் தெரிவிக்கப்பட்டது. தீப-ஸாரங்களையே கொண்டு இவையே போதும் - என்னப்போகிறார்களே! என்ற திருவுள்ளமும் இதில் உள்ளடங்கும் - என்பதாய் அடியேன் ஆசார்யர் ஸ்ரீமதபிநவதேசிக ஸ்ரீஉத்தமூர் வாத்ஸ்ய வீரராகவார்ய மஹாதேசிகன் அடிக்கடி அருளியாகும். ஆக வேதாந்த ஸாரம் - வேதாந்த தீபம் தவிர மற்றைய எல்லா நூல்களுக்கும் ஸ்ரீஸ்வாமி தேசிகன் உரையிட்டருளியாயிற்று. வேதார்த்தஸங்க்ரஹத்துக்கும் ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிய உரை உண்டு என்றும், லண்டனில் Indian Office Library என்ற அரசினர் ஓலைச்சுவடிக் காப்பகத்தில் அது ஸுரக்ஷிதமாய் இருப்பதாகவும், அடியேன் நண்பர் ஒருவர் 25 வருடங்களுக்கு முன்பாகவே தெரிவித்தார். அதன் தற்போதைய நிலை என்ன என்று தெரியாது. யார் அதனை வெளிக்கொணரப் பாடுபடப்போகிறார்களோ? யாருக்கு அந்த புண்யமோ? எதற்காக இவ்வளவு விரிவாய் எழுதியது? என்றால் - ஸ்ரீஸ்வாமிதேசிகன் ஸ்ரீபாஷ்யகாரரின் நூல்களுக்கு உரை எழுதி வெளி மதத்தினரால் அழிவு ஏற்படா வண்ணம் முள்வேலி அமைத்தருளினார். "அப்பய்ய தீக்ஷித மஹா வ்ருஷப:" (அப்பய்ய தீக்ஷிதர் என்கிற நான் ஒரு பெரிய எருதைப் போன்று பிறர் இட்ட பயிர்களை அழிக்க வல்லவன்) என்றும் यस्य वाग्वृतिपर्यन्ता यतिराजसरस्वती। तस्मै वेदान्तगुरवे भूयो भूयो नमो नमः॥ - யஸ்ய வாக்$_3$வ்ருத்திபர்யந்தா யதிராஜஸரஸ்வதீ | தஸ்மை வேதா$_3$ந்தகு$_3$ரவே பூ$_4$யோ பூ$_4$யோ

நமோ நம꞉ || (ஸ்ரீபாஷ்யகாரரின் திருவாக்குகள் எந்த ஸ்ரீவேதாந்த தேசிகனின் முள்வேலியால் பாதுகாக்கப்பட்டுச் செழிப்பாய் வளர்கிறதோ - அந்த ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு மீண்டும் வணக்கம்) என்றும் இது பின்புள்ளாரால் - அன்வய - வ்யதிரேக முறையில் நிரூபிக்கப்பட்டது.

1. இப்படியிருக்க ஸ்ரீபாஷ்யகாரரின் நித்ய க்ரந்தத்திற்கு உரையிடத் தொடங்கிய ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் முதலிரண்டு அதிகாரங்களில் ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தின் மேல் பிறர் கூறிய தோஷங்களைக் களைந்து, பாஞ்சராத்ரம் ப்ரமாணமே என்பதை நிலைநாட்டி, பிறகு ஸ்ரீபாஞ்சராத்ரத்தை அடிப்படையாகக் கொண்டு நித்யக்ரந்தம் அமைக்கப்பட்டதால் இதற்கு உறுதுணையாக முதலிரண்டு அதிகாரங்களைச் சேர்த்தருளினார். பிறகு நித்யத்தை விரித்துரைக்கத் தொடங்கி அபிகமன - உபாதான - இஜ்யா - ஸ்வாத்யாய - யோகம் என்ற ஐந்து காலங்களில், இஜ்யை நடுவில் அமைந்தபடியால் முன் உள்ள அபிகமன உபாதானங்களைச் சுருக்கமாயும் விளக்கமாயும் அருளி - பின் உள்ள ஸ்வாத்யாய யோகங்களையும் இவ்விதமே உரையிட்டருளினார். எதற்காக இந்நூல் இயற்றத் தொடங்கப்பட்டதோ - அந்த இஜ்யா விஷயமான நூல் நித்ய க்ரந்தம். அதன் முதல் வாக்யம் अथ परमैकान्तिनो भगवदाराधनप्रयोगं वक्ष्ये (அத$_2$ பரமைகாந்திநோ ப$_4$க$_3$வதா$_3$ராத$_4$ந ப்ரயோக$_3$ம் வக்ஷ்யே) என்பதாகும். இந்த ஒரு வாக்யத்திற்கு மட்டுமே ஸ்ரீஸ்வாமி தேசிகனின் உரை கிடைக்கிறது. நடுவில் ஸம்பூர்ண நித்யக்ரந்தத்தில் விரிவான வ்யாக்யான பாகம் ஓலைச்சுவடிகளில் கிடைக்கப்பெறவில்லை. லுப்தம் = அழிக்கப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் அஸ்மதாசார்யரான ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி அருளியதைக் காண்பீர்: अधिकारद्वयेन प्रतिपाद्य, पूर्णाहोरात्रकर्तव्यक्रियाकलाप-सङ्ग्रहः सोपपत्ति तृतीयेऽधिकारे आवेदि । परं तत्र नित्यग्रन्थोक्तव्याख्यानांशो मुख्य लक्ष्यभूतो रक्ष्यो न रक्षितः प्राच्यैः । मध्ये विस्तृतस्य यद्भागस्य भ्रंश, (1) किं तालपत्राणां वम्रिभिः, भक्षितत्वात्? (2) आहोकैश्चित् तद्भागस्य आदरेण, (3) अभ्यसूयया वा पृथक्कृतत्वात् प्रनष्टता? इति नावधारयितुं पार्यते (அதி$_4$காரத்$_3$வயேந ப்ரதிபாத்$_3$ய, பூர்ணாஹோராத்ரகர்தவ்யக்ரியாகலாப-ஸங்க்$_3$ரஹ꞉ ஸோபபத்தி த்ருதீயே(அ)தி$_4$காரே ஆவேதி$_3$. பரம் தத்ர நித்யக்$_3$ரந்தோ$_2$க்த வ்யாக்$_2$யாநாம்ஶோ முக்$_2$ய லக்ஷ்யபூ$_4$தோ ரக்ஷ்யோ ந ரக்ஷித꞉ ப்ராச்யை꞉. மத்$_4$யே விஸ்த்ருதஸ்ய யத்$_3$பா$_4$க$_3$ஸ்ய ப்$_4$ரம்ஶ, (1) கிம் தாலபத்ராணாம் வம்ரிபி$_4$꞉, ப$_4$க்ஷிதத்வாத்? (2) ஆஹோகைஶ்சித் தத்$_3$பா$_4$க$_3$ஸ்ய ஆத$_3$ரேண, (3) அப்$_4$யஸூயயா வா ப்ருத$_2$க்க்ருதத்வாத் ப்ரநஷ்டதா? இதி நாவதா$_4$ரயிதும் பார்யதே) என்று.

முக்யமான பெரும்பகுதி ஓலைகளில் காணவில்லை. சொல்லிவைத்தாற்போல் இந்த முக்யமான பகுதியைக் கரையான்கள் அழித்திருக்க முடியாது. யாரோ "புண்யஜனன்" (ராக்ஷஸன்) புண்யம் கட்டிக் கொண்டான்! ஸ்ரீஸ்வாமி தேசிகன் கரந்தம், தங்களுக்கு அநுகூலம் என்று ஆதரித்துக் காத்திருப்பதற்கு வாய்ப்பு சிறிதளவே. அவர்

கூற்று தாங்கள் அப்போது கையாண்டு வரும் நடைமுறைக்கு மாறாக இருக்கவே, "இதனை ஒழித்துக் கட்டுவதே சிறந்தது" என்ற எண்ணத்தில் உள்ள ஓலைகளைத் தேடிக் கண்டுபிடித்து (அறிவாளிகள் எந்நாளிலும் சிலரே! அதிலும் ஓலைகளைப் பாதுகாக்க இந்நாளில் போல் அந்நாளில் சிறந்த ஸாதனமும் - இட வஸதியும் - ஜ்ஞானமும் ஆர்வமும் உடையோர் வெகு சிலரே! அவர்களிடமுள்ளதைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றில் மேற்படி பாகத்தை அழிப்பது வெகு ஸுலபம்!) அழித்தனர் என்பதே உண்மை! "ஸ்ரீஸ்வாமி திருவாராதனம்" என்ற பெயரில் இப்படிப் பிரித்துத் தனியான இந்த பாகம் வெகுநாட்களுக்கு முன்பு அச்சிடப்பட்டுள்ளதாகவும் அஸ்மதாசார்யர் தெரிவித்தருளினார். எது எப்படியோ போகட்டும்.

இப்போது நமக்கு அதே ஸ்ரீஸ்வாமி தேசிகன், திருக்குடந்தைதேசிகனாய் அவதரித்து நாம் உய்வு பெற அருளிய ஆஹ்னிக க்ரந்தம் கிடைத்தது. இதில் விரிவாக நித்யாஹ்னிகம் விளக்கப்பெற்றுள்ளது. இதில் கூறியுள்ளபடித் திருவஷ்டாக்ஷரமந்த்ர ஜபம் செய்ய அங்கந்யாஸ - கரந்யாஸ - பர்வந்யாஸ பர்வக்ரந்தி ந்யாஸங்கள் இதுவரையில் அச்சில் வந்த வேறு எந்த நூலிலும் காணக்கிடைக்காதவை என்பதுடன் இப்படி அநுஷ்டிக்கும் பரமைகாந்திகளும் ஸுதுர்லபர்களே!

2. ஸ்ரீதேசிக திவ்ய ஸஹஸ்ரநாமம் - ஸாதாரணமாய் ஸஹஸ்ரநாமங்களில் ஒரு கோர்வை இராமல் எம்பெருமானின் பெருமைகளே காணப்படும். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்துக்கு உரை தந்த வள்ளல் ஸ்ரீ பராசர பட்டர் இப்படி அஸங்கதமாக மஹர்ஷிகள் அநுஸந்திக்கமாட்டார்கள் - என்று திருவுள்ளப்பட்டுத் தமது பகவத் குண தர்ப்பணத்தில் ஸ்ரீஸஹஸ்ரநாமத்தை 44 தளங்களாய்ப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒரு அவதார ஸ்வரூப - ரூபாதிகளின் பெருமை பேசப்பட்டது என்று காட்டியருளினார். அந்த பட்டர் கருத்துப்படி - உதிரியாய் அமையாமல் - ஒரு கோவையாம் ஸ்வாமி தேசிகனின் அவதாரம் முதற்கொண்டு அவரது குலப்பெருமை - அம்மானின் குலப்பெருமை - ஸ்ரீபாஷ்யகாரரின் ஸம்ப்ரதாயச் சிறப்பு - ஆசார்யரின் ஆசார அநுஷ்டானங்கள் - அவர் செய்தருளிய திவ்யதேச யாத்ரைகள் - அவர் அருளிய க்ரந்தங்கள் - அதன் வாயிலாக அவர் வெளியிடும் ஸித்தாந்தக் கருத்துக்கள் - சரணாகதியைப்பற்றி ஸ்ரீஸ்வாமியின் கருத்துக்கள் முதலியன யாவும் ஓர் ஒழுங்கு முறையில் ஒன்றும் விடாமல், குறிக்கப்பெற்றுள்ளன. சததூஷணீ என்பது மிகவும் கடுமையான தருக்கச்செறிவு உள்ள வாதநூலாகும். அதில் 66 வாதங்களே கிடைக்கின்றன. ஒவ்வொரு வாதத்தின் சுருக்கமாகவும் ஒரு திருநாமம் இதில் அமைந்துள்ள பாங்கு சாஸ்த்ர பாராவார பாரங்கதர்களுக்கே புரியும்! ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிய ஒவ்வொரு நூலைப் பற்றியும் அதன் ஸாரத்தையும் அறிய இந்த

ஸஹஸ்ரநாமம் போதும்! அப்படிச் சுருங்கக்கூறி விளங்கவைக்கும் பாங்கில் அமைந்தது இது.

3. தசநிர்ணயீ - ஸ்ரீந்ருஸிம்ம ஜயந்தீ - ஸ்ரீராமநவமீ - ஸ்ரீக்ருஷ்ண ஜயந்தீ என்பதாய் பகவதவதாரங்களில் மூன்றையே வ்ரதமாகத் தொன்றுதொட்டு நாம் அனுஷ்டித்து வருகிறோம். இவைகளைப் பற்றியும் ச்ரவண த்வாதசீயைப் பற்றியும், ஜன்மாஷ்டமீ ஸ்ரீஜயந்தீ இரண்டும் தனித்தனியே வந்தால் தனியாகவே அநுஷ்டிக்கவேண்டிய முறைகளையும் ஸகல பூர்வாசார்ய ப்ரமாண வாக்யங்களையும் எடுத்துக்காட்டி இவற்றில் நிர்ணயம் செய்துள்ளார். இதில் முக்கியமானது ஸ்ரீஜயந்தீ நிர்ணயம்.

4. வைச்வதேவாக்நி நிர்ணயம் - வைச்வதேவம் என்பது பஞ்சமஹாயஜ்ஞத்துடன் தொடர்புடைய நித்யகர்மங்களில் ஒன்றாகும். पञ्चमहायज्ञाद्यनुष्ठानं शक्तितः क्रिया। क्रियावान् एष ब्रह्मविदां वरिष्ठः (பஞ்சமஹாயஜ்ஞாத்$_3$யநுஷ்டா$_2$நம் ஶக்தித: க்ரியா. க்ரியாவாந் ஏஷ ப்$_3$ரஹ்மவிதா$_3$ம் வரிஷ்ட$_2$:) என்ற பங்க்தி ஸ்ரீபாஷ்யத்தில் வருகிறது. தர்மங்களை அநுஷ்டிக்கவேண்டும். "இப்படி இருக்கவேண்டும்" என்று வாயால் உபதேசம் செய்வதைவிடத் தாமே அநுஷ்டித்துக்காட்டுபவனே மேலான ஆசார்யனாவான்.

இப்படி அனுஷ்டிப்பவர்களுக்கு வைச்வதேவம் முக்யம். ஔபாஸனம் போல் வைச்வதேவம் (இந்நாளில் ஔபாஸனம் போல் வைச்வதேவம் அநுஷ்டாதாக்கள் இடையிலேயே குறைந்துவருகிறது! அந்தோ பரிதாபம்!) இந்த வைச்வதேவத்தை எந்த அக்நியில் நடத்துவது? என்பது அந்நாளில் பெரும் விவாதத்திலிருந்தது.

1) எந்த ஹோமமும் கார்ஹபத்யாக்னி - அதாவது விவாஹமானதும் ஸ்தாலீபாகம் செய்து தொடங்கிய அக்னியிலே செய்யவேண்டும். 2) பசனாக்னியில் - தளிகை பண்ணிய அடுப்பிலுள்ள அக்னியை, மேல் உள்ள அன்னத்தினை (பத்து முதலியன) பிடித்துணியால் துடைத்துவிட்டுத் தூய நீரால் ப்ரோக்ஷித்துக் கோலமிட்டு அதன் அடியில் செய்யவேண்டும். 3) லௌகிகாக்னியில் செய்யவேண்டும் என்று மூன்று விதமான விவாதங்கள். 4) வஹ்னி ஸந்தர்ப்பணம் என்பதாக ஒரு சடங்கு தர்ப்பண ரூபமாய்ச் செய்துவிட்டாலே போதும், எப்போதுமே அக்னி தேவையில்லை என்றும் ஒரு பக்ஷம். இப்படியெல்லாம் விவாதம் தலைப்பட, இவற்றில் பசனாக்னி ப்ரதானம், ஔபாஸநாக்னியும் தகும் என்று இந்நூலில் விசாரித்து நிர்ணயம் செய்துள்ளார்.

5. உத்தர ஸாராஸ்வாதினீ - இவரது ஆசார்யரான ஸ்ரீஸாக்ஷாத் ஸ்வாமி வடுவூரில் அந்திம தசையில் எழுந்தருளி நமது ஸம்ப்ரதாயத்திற்கு மிகவும் அவச்யமான க்ரந்தங்களை அருளிச்செய்துவந்தார். ஸ்ரீஸ்வாமி தேசிகனிடத்தில் அபாரமான பக்தியால் - அவரது ஸ்ரீஸூக்திகளுக்கு உரையிட்டும், அவரது நூற்களில் அபார்த்தம் =

பொருந்தாத கருத்து கூறியவர்களை மறுத்தும் நூல்களை அநுக்ரஹித்த மஹான் அவர். இருபத்திநாலாயிரப்படி - மற்றும் சப்தார்த்தம், ஸ்ரீதத்துவ ஸித்தாஞ்ஜனம், ந்யாஸவித்யா தர்பணம் முதலியன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இதேபோல் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு ஸ்ரீஸாராஸ்வாதினீ என்ற பெயரில் விரிவான - மணிப்ரவாள நடையில் - உரை எழுதத்தொடங்கினார். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு முதன்முதலில் உரையிட்டவர் - கௌசிக குல திலக - ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீநிவாஸாசார்யர். ஏறத்தாழ 600 வருஷங்களுக்கு முந்தினவர். இவரைப் பின்பற்றி ஸம்ஸ்க்ருதத்தில் சில இடங்களில் மாறான கொள்கையினராயினும் - முறையான வ்யாக்யானம் அருளியவர் பாரத்வாஜ ஸ்ரீநிவாஸாசார்யர். இவர்கள் இருவருமே ஸ்ரீஸ்வாமி தேசிகனிடத்தில் கரைகாண முடியாத பக்தி உடையவர்கள். இவர்கள் கருத்துக்களுக்கு மாறாக ஒருவர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலுள்ள சிலவற்றுக்குக் கருத்துரைக்க முற்பட்டார். அவர் கூற்றை மறுக்கும் முகமாகவே ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி தமது ஸாராஸ்வாதினியை எழுதத் தொடங்கியது. முதிர்ந்த பிராயத்தில் தொடங்கியபடியாலும், பகவத் ஸங்கல்பம் நம் திருக்குடந்தை தேசிகன் மூலமே முடிவு பெற இருந்தபடியாலும் அந்த மஹான் தமது சிஷ்யர்களில் ப்ரதானரான நம் திருக்குடந்தை தேசிகனை வடுவூருக்கு வரவழைத்துத் தாம் இயற்றிய ஸாங்கப்ரபதநாதிகாரம் வரையிலானதின் உரையைக் கொடுத்து, "இதனைப் பூர்த்தி செய்யவும்" என்று நியமித்தார். நம் "குடந்தை எம் கோவலனும்" அங்கீகரித்து, முதலில் த்வயாதிகாரத்திற்கு ஸ்ரீஸ்வாமி கருத்துக்கு இசைய உரை எழுதி அதைத் தமது ஆசார்யன் கடாக்ஷிக்கக் காட்டியருளினார். அதைக்கண்டு பரமஸந்தோஷம் அடைந்த ஸ்ரீஸாக்ஷாத் ஸ்வாமி போர உகந்தருளி "நீரே தேசிகன் திருவுள்ளமறிந்து உரை எழுதியுள்ளீர். மிகவும் பொருத்தம். அந்த தேசிகனே திருக்குடந்தையில் தோன்றினாரோ? எனப்படுகிறது. ஆகவே நீரே "திருக்குடந்தை தேசிகன்". "இதனைப் பூர்த்தி செய்யும்" என்று நியமித்தாயிற்று. அதன்படி உத்தர ஸாராஸ்வாதினியை எழுதிப் பூர்த்தி செய்து ஆசார்யனின் நியமனத்தை நிறைவேற்றியருளினார். இந்த க்ரந்தத்தின் பெருமைகளை இச்சிறிய கட்டுரையில் எழுத முடியாது. பிறகு வாய்ப்பு ஏற்படும்போது விவரிக்க விழைகிறேன்.

6. **ஸ்ரீமத் அபர்யாப்தாம்ருத த்யான ஸோபாநம்** - திருக்குடந்தை அமுதன் தமிழ் வேதத்தைப் பாதுகாத்து ஸ்ரீமந் நாதமுனிகளுக்குக் கிடைக்க வழி வகுத்தவர். அதனாலும் இவரை ஸம்ப்ரதாயத்தில் ஆராவமுதாழ்வான் என்று - இந்தச் சரித்ரம் உள்ளடங்கியபடிச் செல்லமாய் அழைப்பர். முதன்முதலில் முதலாழ்வார் மூவரைத் தமது இருப்பிடமான பெண்ணையாற்றங்கரைக்கு வரவழைத்து அவர்கள் வாயிலாகப் பாசுரங்களைக் கேட்டு மகிழ்ந்தவர் திருக்கோவலூர் ஆயனார். அவரைப் பற்றி

ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஒரு ஸ்தோத்ரம் அருளியுள்ளார் - ஸ்ரீதேஹளீச ஸ்துதி என்று. ஒரு நூலிலும் மங்களச்லோகம் ஆயனாரைப் பற்றி உண்டு - ஸச்சரித்ர ரக்ஷையில். ஆனால் நம் "குடந்தை எம் கோவலன்" இல்லையேல் அந்த முதலாழ்வார்களின் அருளிச்செயலும் நமக்குக் கிடைத்திருக்காது. ஆயினும், இவரைப்பற்றி ஏதும் துதிநூல் இல்லையே அவர் மூலம் என்ற குறை வெகு காலமாக எல்லோருக்கும் உண்டு. அக்குறை தீர நம் திருக்குடந்தை தேசிகன் இந்தத் துதிநூல் அருளிச்செய்தார். (ஸ்ரீதேசிகன் ஸ்ரீகீதாபாஷ்ய தாத்பர்யசந்த்ரிகையை எழுதத்தொடங்கியது குடந்தையில். ஆகவே தான், சாரங்கபாணியைப் பற்றி மங்களத்தில் அதில் உள்ளது - என்பதையும் மற்றும் பலபடியும் அடியேன் திருக்குடந்தையையும் ஸ்ரீஸ்வாமி தேசிகன் மங்களாசாசனம் செய்தருளின திவ்யதேசம் என்பதாய் வேறோர் இடத்தில் ஒரு கட்டுரையில் விரிவாய்த்தெரிவித்துள்ளேன். த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் சோழநாட்டு நாற்பது திவ்யதேசங்களின் நம்மாழ்வார் அநுபவித்தவைகளைத் தாமும் அநுபவித்துள்ளார். மேலும் पुण्येषु देवि! पुलिनेषु मरुद्वृधायाः (புண்யேஷு தே$_3$வி! புலிநேஷு மருத்$_3$வ்ருதா$_4$யா:) என்று ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் சோழ நதியான திருக்காவிரியின் மணற்றிட்டுக்களில் உறையும் எல்லா எம்பெருமான்களையும் ஒன்றுசேர அநுஸந்தித்துள்ளதையும் காண்க. ஆகவே திருக்குடந்தையும் ஸ்ரீதேசிகன் பாடல் பெற்ற தலமே.

த்யானம் என்பது யோகசாஸ்த்ரப்படி அஷ்டாங்கயோகம். 'அங்காங்கி ஸமுச்சயேந - 8' என்றாலும் அங்கங்கள் 7. அங்கி ஒன்று. ஆகவேதான் ஸ்ரீஸ்வாமி தேசிகன் பகவத் த்யான ஸோபானத்தில் ஸ்ரீரங்கநாதனின் திருவடி தொடங்கி 7 அங்கங்களை = உடல் உறுப்புக்களைத் துதித்து அங்கியானவரையும் ஒவ்வொரு சுலோகத்திலும் அனுபவித்தது. அதே நடையில் ஆந்த்ர மஹாவிஷ்ணு என்று ப்ரஸித்தமானவரும் ஸ்ரீரங்கத்தைப்போல் க்ருஷ்ணா நதி இருபுறமும் ஓட இடையில் அமைந்த ஸ்ரீகாகுளம் என்ற சிற்றூரில் பள்ளிகொண்டவரும், ஸ்ரீக்ருஷ்ணதேவராயரால் ஸ்ரீஆண்டாளின் திருப்பாவையைத் தெலுங்கில் பாட்டாக யாத்து, “ஆமுக்த மால்யதா" என்ற பெயரில் ஒரு நூலாக்கி இந்த எம்பெருமானின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்டு ஏற்று அருளியவருமான ஸ்ரீகாகுளேச்வரர் என்ற பள்ளி கொண்ட பெருமாளைப் பற்றி நம் ஸ்ரீஸ்வாமி தேசிகன் திருக்குமாரரான ஸ்ரீகுமார வரதாசார்யர் பகவத் த்யான பத்ததி என்ற துதிநூல் அருளியுள்ளார். (இந்நூல் சென்னை ஓரியண்டல் ஓலைச்சுவடி காப்பகத்தில் உள்ளது. தெலுங்கு லிபியில் முன்பு எப்போதோ அச்சிட்டதாகக் கேள்வி. நான் ஓலையில் படித்துள்ளேன். பகவத் த்யான ஸோபாந நடையில் அமைந்தது. யாராவது இதை வெளிக்கொணர்ந்தால் அவர்கள் பாதங்களை அடியேன் சிரஸ்ஸால் வணங்க ஸித்தமாயிருக்கிறேன்) இவர்களையடியொற்றி அமைந்தது இந்தத் துதிநூல்.

7. ஸ்ரீசார்ங்கபாணி மங்களாசாஸனம் - ஸ்ரீஆளவந்தாரின் சது:ச்லோகீயைப் போல் நான்கே ச்லோகங்கள். त्रिविक्रम! भवत्क्रमः क्षिपतु मङ्क्षु रङ्गद्विषः (த்ரிவிக்ரம! ப₄வத்க்ரம: க்ஷிபது மங்க்ஷு ரங்க₃த்₃விஷ:) என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன். அவர் காலத்தில் திருவரங்கத்தில் துருஷ்க யவநாதிகளால் ஏற்பட்ட பயம் நீங்க ப்ரார்த்தித்தது போல் திருக்குடந்தையில் க்ஷூத்ரர்களால் கோவில் நடைமுறைகளில் தொல்லை ஏற்பட்டது. கோவிந்த தீக்ஷிதன் என்ற சைவன் ஆராவமுதாழ்வானின் தென்னண்டை பக்கத்தை ஆக்ரமித்து இடித்துத் தள்ளிக் குறுக்கி அருகில் ஒரு மூலையில் இருந்த சிவன் கோவிலுக்குப் பெரிய கட்டிடம் எழுப்பியதும், அமுதனின் புஷ்கரிணியான மாமாங்கக் குளத்தை அவன் அரச பலத்துடன் ஆக்ரமித்து ஒரே இரவில் அக்குளக்கரையில் எல்லா மூலைகளிலும் லிங்கம் முதலான தேவதாந்தர ப்ரதிஷ்டை செய்ததும், அக்குளக்கரையிலிருக்கும் அனுமன் சிலையை அப்புறப்படுத்தவும் - அதையே பிள்ளையாராக மாற்றப் பலமுறை முற்பட்டபோதும் ஆஞ்சனேயராகவே அவர் உருப் பெற்றதும், இதைக்கண்டே विनायकं प्रकुर्वाणो रचयामास वानरम् - விநாயகம் ப்ரகுர்வாணோ ரசயாமாஸ வாநரம் (பிள்ளையார் செய்யத் தொடங்கி ஹனுமாராய் முடிந்தது) என்ற பழமொழியே தோன்றியதும் சரித்ர உண்மை. அத்துடன் நில்லாமல் கோவிலுக்கு அரசாங்கம் மூலமாக நித்யோத்ஸவாதிகளுக்கு வரும் உதவியையும் அவன் நிறுத்தத் தலைப்படவே, அமுதன் நித்யப்படிகளுமே நிர்விக்னமாய் நடைபெறாதோ - என்று அஞ்சிய அந்நாளைய பெரியோர்கள் நம் திருக்குடந்தை தேசிகனை ப்ரார்த்திக்க - ஸ்வாமி நிர்விக்னமாய் முன்போல் எல்லாம் நடைபெற மங்களாசாஸனம் செய்தது இந்த நூல். ஸ்ரீஸ்வாமி தேசிகன் திருவுள்ளமுகக்கும்படி நித்யோத்ஸவாதிகளைக் கண்டருளவேண்டும் என்றிதில் வருகிறபடியால் - இடையில் ஏற்பட்ட ஏகதேசிகளின் ஆக்ரமிப்பு நீங்குதலும் இதில் உள்ளடங்கும். இவையாவும் ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் அருளிச்செய்ய அடியேன் கேட்டது. பரமைகாந்திகளும் ஸத்ஸம்ருத்தியை எதிர்பார்த்து இவ்விதம் எம்பெருமானிடம் பரார்த்திப்பது உண்டு. ஸ்ரீதொட்டயாசார்ய ஸ்வாமியிடம் வாதப்போரில் தோற்ற ஒரு அத்வைதி "சேஷம் சாபேந பூரயேத்" (முறைப்படி முடியாத கையாலாகாதவன் சாபம் இட்டுத் தமது விருப்பத்தை ஈடேற்றிக்கொள்ளவும்) என்ற குட்ரயுக்தியைக் கடைப்பிடித்து நிக்ரஹாஷ்டகம் என்று வன்மத்துடன் எட்டு சுலோகங்களைப் பாடி அவருக்குத் தொல்லை கொடுக்கத் தலைப்பட்டதும், ஸ்ரீதொட்டையாசார்ய ஸ்வாமி இதனை அறிந்து பதிலுக்கு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனைப் பற்றி ஐந்து சுலோகங்களில் துதிக்க அந்தத் தொல்லை நீங்கியதும் அவர் சரித்ரத்தில் உண்டு. ஆகவே "யதாசக்தி நிக்ருஹ்ணீயாத் தேவதா குரு நிந்தகான்" என்ற கணக்கில் இது தகும்.

8. **நிக்ஷேப சிந்தாமணி:** இதில் இரண்டு அதிகாரங்கள். முதலில் சரணாகதியின் அங்கங்களைப் பற்றிய தெளிவும், அவற்றின் லக்ஷணங்களும் அதன் உட்பிரிவுகளும் மேலும் சரணாகதியைப் பற்றிய உபயோகமான பல விஷயங்களும் ப்ரமாணங்களையும், ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளையும் காட்டி நிரூபணம் செய்துள்ளபடி. இரண்டாவதில் பஞ்சகால பராயணர்களுக்கு மிகவும் தேவையான அபிகமன - உபாதான - இஜ்யா - ஸ்வாத்யாய - யோகங்களைப் பற்றிய விளக்கம் அற்புதமானது. ப்ரஸங்காத் பல அபூர்வ விஷயங்கள் தெரிவிக்கப்பெற்றன.

9. **திருப்பல்லாண்டு வ்யாக்யானம்** - பெரியாழ்வார் திருமொழியில் முதல் பத்தில் முதல் தசகம் திருப்பல்லாண்டு எனப்படும். ஏற்கனவே இப்பகுதிக்கு மட்டும் பலர் உரையிட்டுள்ளார்கள். ஆயினும் நம் ஸ்வாமியின் உரை மிகவும் ரஸகநமானது. "ஆத்யம் து த்ர்யக்ஷரம் ப்ரம்ஹ த்ரயீ யத்ர ப்ரதிஷ்டிதா" என்றபடி வேதங்களுக்கு ப்ரணவம் போன்றது - தமிழ்வேதங்களுக்கு இத்திருப்பல்லாண்டு. இதில் நமது ஸம்ப்ரதாயார்த்தங்கள் யாவும் "சிறிய கண்ணாடி பெரிய உருவைக் காட்டுமாப் போலே" என்று ஸ்ரீஸ்வாமிதேசிகன் அருளியபடிப் பொதிந்துள்ளன. இதன் மூலம் தமிழ் வேதங்களை அறிய, நீராட, ஒரு நல்ல துறை ஏற்படுத்தியருளினார்.

10. **கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம்** - "தேவு மற்றறியேன்" என்று நிலையாய் நின்று ஆழ்வார் ஒருவரே போதுமென்று ஆசார்யனின் பெருமைகளை வெளியிட்டவர் ஸ்ரீமதுரகவிகள். மதுரகவி ஹ்ருதயம் என்பதாய் ஸ்ரீஸ்வாமி தேசிகனே இதற்கு உரை எழுதியதாய் ஏற்படுகிறது. நாலாயிரம் பாசுரங்களின் தனியன்களுக்கு உரை எழுதிய வாத்ஸ்ய அஹோபிலாசார்ய ஸ்வாமி (இந்த ஸ்வாமி ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயம், ஸ்ரீமுநித்ரய ஸம்ப்ரதாயம் இரண்டிலும் ஆசார்ய பரம்பரையில் எழுந்தருளும் மஹான் ஆவார்). இந்த மதுரகவி ஹ்ருதயத்திலிருந்து இரண்டு வாக்யங்களை எடுத்து உதாஹரித்துள்ளார். அவ்வளவு காலம் வரை ப்ரசாரத்திலிருந்து அந்த க்ரந்தம் இப்போது கிடைக்கவில்லை. போகிறது. நமக்கு ஸ்ரீதிருக்குடந்தை தேசிகன் அருளிய உரை கிடைத்தது.

இன்னமும் சிறியதும் பெரியதுமான சில க்ரந்தங்கள் அருளியிருப்பதாகவும் ஏற்படுகிறது. தேவையான ஆதாரத்துடன் ஸரியானபடி விளக்கம் தர யாரும் முன்வரவில்லை. கிடைத்த வரையிலும் உள்ளதை ஸேவித்து இவற்றைப்பற்றி அடியேன் சற்று சுருக்கியே எழுதினேன். பூர்வாசார்யர்களைப் பற்றி அவர்களது மஹோத்ஸவாதிகளிலாவது சற்று விரிவாய் அறிவது ப்ராப்தமானது. ஆனபடியால் தெரிந்த வரையில் எழுதினேன்.

## ஆசாராநுஷ்டானங்கள்

தமது முன்னோர்கள் ஸம்பாதித்து வைத்திருந்த ஸொத்து முழுவதையும் ஸத்பாத்ரங்களிடம் ஸமர்ப்பித்துவிட்டே காலக்ஷேபம் செய்ய ஸ்ரீரங்கம் எழுந்தருளியதாய்ச் சரித்ரம். பிறகு ஸ்ரீதேசிக வ்ருத்தி என்றே நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸித்தமான உஞ்சவ்ருத்தியையே திருவுள்ளபட்டாயிற்று. அதிலும் சில அஸௌகர்யங்கள் ஏற்பட்டன. ஒரே திருமாளிகையில் நிறைய சேர்க்கத் தலைப்பட்டனர். இதுவும் வேண்டாம் எனத் திருவுள்ளத்தில் தமது பர்ணசாலையை ஒட்டி உள்ள இடத்தில் (திருக்குடந்தை கர்ணக்கொல்லை அக்ரஹாரம்) தமது சிறிய தென்னந்தோப்பில் கிடைக்கும் தேங்காய்கள், ஓலை முதலானவற்றைக்கொண்டே பண்டமாற்று முறையில் தேவையான பொருட்களைப் பெற்றுக் கதஞ்சித் தேஹயாத்ரையைச் செய்தபடியாம். ஸச்சிஷ்யர்கள் ஏதாவது த்ரவ்யம் ஸமர்ப்பித்தாலும் அவற்றை ஒன்றுசேர்த்து அமுதனுக்குத் திருவாபரணம் யதோசிதம் செய்து ஸமர்ப்பித்தாகிவிடும்.

ஒரு முறை ஊரில் ஒரு ப்ரமுகர் வீட்டில் விவாஹம், தெருவடைத்துப் பந்தல் போட்டார்கள். ஓரடிக்கு ஒரு கம்பம் நட்டுத் தென்னங்குலைகளைக் கட்டத் தொடங்கினார் அந்தப் பிரபு. தென்னங்குலைகள் எங்கிருந்தாலும் கொண்டுவரத் தமது ஆட்களை ஏவினார். மளமளவென்று வந்து நமது ஸ்வாமியின் தோட்டத்துக் குலைகளையும் இவரிடம் கேளாமலேயே வெட்டி எடுத்துச்சென்றனர். தினமும் கல்பக வ்ருக்ஷமானபடியால் அம்மரங்களை ஒருமுறை கடாக்ஷிக்கும் வழக்கம் ஸ்வாமிக்கும் உண்டு. அன்று பார்த்தபோது இளங்குலைகளும் கூட வெட்டப்பட்டிருந்தன! வழக்கம் போல் காலக்ஷேபம் செய்யச் சிஷ்யர்கள் வந்தனர். அதில் மூன்று யதீச்வரர்களும் இருந்தனர். ஸ்ரீஸ்வாமி திருமுகமண்டலத்தில் வாட்டம் சிறிது காணப்பட்டது. அதைக் கவனித்த மூன்று யதீச்வரர்களும் மிகவும் ப்ரயாசைப்பட்டுக் காரணம் அறிந்தனர். அந்த ப்ரபுவிடம் சென்று அனுமதியின்றி தமது ஆசார்யரின் தோட்டத்தில் புகுந்துத் தென்னங்குலைகளைக் கொய்ததைத் தெரிவித்தனர். அந்த ப்ரபு ஸாத்விகன். உடனே பதறிப்போய் ஸ்வாமியிடம் நேரில் வந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு பல தென்னங்குலைகளைத் திருப்பினான். ஸ்வாமி அவற்றை ஸ்வீகரிக்கவில்லை. தமது குலைகள் எவை என்று தினமும் கண்டுவருவதால் தெரியுமானபடியால் அந்தக் குலைகளை மட்டும் பெற்றுக்கொண்டு மற்றவற்றைத் திருப்பியபடியாம். இதில் என்ன வேடிக்கை என்றால் - ஸ்வாமி திருமாளிகைக் காய்கள் சிறிய ஜாதியைச் சேர்ந்தவை. எம்பெருமான் எனக்கு இவற்றை மீண்டும் அளித்தானே! அதுவே போதும்! என்று அருளியபடி. இப்படி ஆபத்துக் காலத்திலும் ஒரு த்ரவ்யமும் பிறருடையது வேண்டாம்

என்ற திருவுள்ளப்படிக் கடைசி வரையிலும் அனுஷ்டானத்தை அமுதன் தலைக்கட்டி வைத்தான். ஓலைகளை முடைந்துகொண்டே ஸர்வார்த்த ஸித்தி, சததூஷணீ முதலான க்ரந்தபாடம் ஸாதிக்கும்படியாயிருக்குமாம். சிஷ்யர்கள் "நாங்கள் இந்தக் கைங்கர்யத்தைச் செய்ய அனுமதிக்கலாகாதா?" என்று வேண்டினாலும், "இருக்கட்டும். பிறகு நடக்கிறது" என்று யாரையும் எந்த ஒரு உதவியையும் நாடாமல் தமது நித்யாநுஷ்டானத்தை அனுஷ்டித்தபடி. ஸ்ரீகோசங்கள் ஏதும் தேவையில்லாமல் வாசோவிதேயமாக இப்படி ப்ரௌட க்ரந்தங்களும் முகஸ்த்தங்கள்.

## யாத்ரை

தெற்கே திருவணை வரை சிஷ்யர்களுடன் ஸகுடும்பமாயும் யாத்திரையை முடித்துக்கொண்டு வடதேச யாத்ரையை ஸங்கல்பித்துக்கொண்டு திருமலை வரை எழுந்தருளினபடி. வடக்கே ஏற்கனவே சென்றுவந்த சிஷ்யர்களில் சிலரும் ஆப்தர்களும் "ஸ்ரீஸ்வாமியின் ஆசாராநுஷ்டானங்களுக்கு அடியோடு வடதேச யாத்திரை தோதுபட்டு வராது - பதி பாத: - யாத்திரையில் கால் பங்கு ஆசாரமும் போதும் - என்று சாஸ்த்ரமிருந்தாலும் இங்கத்திய விலக்ஷணாசாரத்திற்கு அடியோடு ஒத்துவராது. வேண்டாம்" என்று ப்ரார்த்தித்தார்களாம். ஸ்வாமியும் அவர்கள் கூறுவதில் உள்ள உபாயத்தைக் கவனித்துத் திருமலையிலிருந்தே திக்கு நோக்கி வடதேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து ஸேவித்துத் திரும்பித் திருக்குடந்தை எழுந்தருளியதாகச் சரித்திரம்.

இப்படி ஸ்ரீஸ்வாமியின் சரித்ரம் அம்ருத ஸாகரம் போன்றது. அல்லித்தண்டாலே அதை முழுவதும் சுவைக்க விரும்பும் குழந்தையைப் போன்ற நிலையில் அடியேன் உள்ளேன். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீபறவாக்கோட்டை ஸ்வாமிகள் நியமித்ததைத் திருக்குடந்தை தேசிகனின் 300-வது திருநக்ஷத்ர பூர்த்தி அன்றைக்கு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமதாண்டவன் அத்யக்ஷத்தில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் அடியேன் செய்த சிறிய உபந்யாஸத்தில் தெரிவித்த கருத்துக்களையே ஒரு வ்யாஸமாக எழுதியுள்ளேன். இதில் தெரிவித்த கருத்துக்கள் அடியேன் ஆசார்யரான ஸ்ரீமதபிநவ தேசிக ஸ்ரீஉத்தமூர் ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபகாலங்களில் நேரில் கேட்டவையும், அடியேனது நெருங்கிய பந்துவான ஸ்ரீ உ.வே. நல்லூர் சிங்கம் க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ உ.வே. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யர் முதலானோரிடம் அவ்வப்போது நேரில் கேட்டவையுமாகும். நமோ மஹத்ப்ய:

நன்றி: ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஆண்டவன் ஸ்ரீகோபாலதேஶிக மஹாதேஶிகன் ஶதாபிஷேக மஹோத்ஸவ மலர் - 2001.



**ஸ்ரீமத் ஸ்வாமி திருக்குடந்தை தேஶிகன்**
**(திருவவதார ஸ்தலமான ராயம்பேட்டையில் ஸேவை ஸாதிக்கிறபடி)**

**(திருவடிவாரத்தில் முநித்ரயங்கள் - ஸ்ரீமந் நாதமுனிகளின் அம்ஶபூதரான வத்தராயிருப்பு ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன், ஸ்ரீமத் யாமுனமுனிகளின் அம்ஶபூதரான செய்யானம் ஸ்ரீரங்கநாத மஹாதேஶிகன், ஸ்ரீமத் பகவத் பாஷ்யகாரரின் அம்ஶபூதரான ஸ்ரீரங்கம் ஸ்வாமீ (வழுத்தூர் ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேஶிகன்)**

ஸ்ரீ:

ஸ்ரீமதே கனகவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ந தைவம் தேஶிகாத் பரம் தேஶிகோக்தே: பரம் நாஸ்தி ந பரம் தேஶிகார்ச்சனாத்

ஸ்ரீதேஶிகனை வாசிப்போம் ஸ்ரீதேஶிகனையே ஶ்வாஸிப்போம்

ஸ்ரீ முநித்ரய ஸம்ப்ரதாய கூடஸ்தராகிய

## ஸ்ரீமத் திருக்குடந்தை தேஶிகன்

என்கிற

## ஸ்ரீ கோபாலார்ய மஹாதேஶிகன்

(ஸ்ரீமதுபயவே. வேதஶாஸ்த்ர கல்பதரு.
அம்மாஸத்ரம் ஶேஷாத்ரியார்ய மஹாதேஶிகன்)

==========================================================================================

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு அத்யந்தாபிமதமான அர்ச்சாவதார அபிவ்யக்தி க்ஷேத்ரங்களில் "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசித் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶ:, தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரி ச மஹாபாகா" என்று பராஶர ப்ரப்ருதி மஹர்ஷிகளால் ஸ்துதிக்கப்பட்டும் திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், திருக்குடந்தை, திருவழுந்தூர் ப்ரப்ருதி திவ்யக்ஷேத்ர அதிஷ்டிதமாயும் தொண்டரடிப்பொடியாழ்வார் ப்ரப்ருதிகளுக்கும், ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் முதலிய ஸகலாசார்யர்களுக்கும் அவதாரஸ்தலமாயும் விளங்குகிற காவேரீ தீரத்தின் தெற்குப்பாகத்தில் செல்வம் மல்குகுடித் திருவிண்ணகர் என்றும் மின்னப் பொன்மதிள்சூழ் திருவிண்ணகர் என்றும், ஆழ்வார்களால் மங்களாஶாஸனம் பண்ணப்பட்ட பூலோகவைகுண்டமான திருவிண்ணகரில் “கலௌ வேங்கடநாயக:” என்று இந்த யுகத்தில் விஶேஷித்து ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான திருமலை திருவேங்கடமுடையானுடைய அபராவதாரமாக விளங்குகிற ஸ்ரீநிவாஸன், முன்பு

திருப்பதி திருவேங்கடமுடையான் தம்முடைய திவ்யகண்டாம்ஶமாகத் தூப்புல் நிகமாந்தமஹாதேஶிகனாக அவதரிப்பித்ததுபோல் தாமும் தம்முடைய கண்டாம்ஶமாக தேசிகனை இந்தத் திவ்யதேஶத்தில் அவதரிப்பித்து இவ்வுலகத்தில் ஸ்ரீதேஶிக திவ்யஸூக்திகளையும் அவற்றில் சொல்லப்பெற்றுள்ள ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளின்படியான அநுஷ்டானங்களையும் தெளிவித்துப் பரப்பவும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திற்குத் தாத்பர்ய விஷய விஶேஷார்த்தங்களை விவரித்து ஶரணாகதி ஶாஸ்த்ரார்த்த விஶேஷங்களை வெளியிட்டு லோகோஜ்ஜீவநம் செய்யவும் திருவுள்ளம் பற்றி, முந்திய நிகமாந்த மஹாதேஶிகனுக்கு ஆசார்யரான அப்புள்ளார் திருவம்ஶமாகிய ஸ்ரீ ஆத்ரேய கோத்ரத்தில் ஜ்ஞாநாநுஷ்ட்டான ஶாந்தி நிதியாயும், ப்ரஹ்மவிதக்ரேஸரருமான ஸ்ரீ ரகுநாதாசார்யர் குமாரராயும் தம்முடைய ஸந்நிதிக்கு மேற்குத்திக்கில் ஶிஷ்டாதிஷ்டிதமாயும் அதிமனோஹரமாயும் அத்யந்தம் ஏகாந்த ஸ்தலமாயுமுள்ள, (திருக்கண்டியூர் திவ்யதேஶ ஸமீபத்தில்) ராயம்பேட்டை என்கிற அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீக்ருஷ்ணஸூரி திருமாளிகைக்கு எழுந்தருளி, அவர் ஸ்வப்நத்தில் ஓர் பரமைகாந்தியாக ஸேவை ஸாதிக்க க்ருஷ்ணஸூரியும் "தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம், ரூபௌதார்யகுணை: பும்ஸாம் தருஷ்டிசித்தாபஹாரினம், தாஸாமாவிரபூத் ஶௌரி:" என்கிறபடியே த்ருஷ்டிசித்த ஆகர்ஷகரான அந்த ஸ்வாமியினுடைய தேஜஸ்ஸையும் கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸும்ருஷ்டநாள ரவிகரவிகஸித புண்டரீக தளாமலாயதங்களான திவ்ய திருக்கண்களையும் ஸேவித்தவாறே, இவர் ஸாக்ஷாத் ஸ்ரீநிவாஸனே என்று தெளிந்து எழுந்திருந்து பக்திபாராவநமித ஶிரஸ்கராய்க் கும்பிட்டு நட்டமிட்டாடி ஆநந்த ஸாகராந்தர்நிமக்நராய், ஹர்ஷகத்கத கண்டராய் தயாஶதகத்தை அநுஸந்தித்துக் கொண்டுநிற்குமளவில், பகவானும் க்ருபை கூர்ந்து மந்தஹாஸத்துடன் "ஓ க்ருஷ்ணஸூரியே! நம்முடைய திவ்யகண்டையை உம்மிடத்தில் தேஶிகனாக அவதரிப்பிக்க ஸங்கல்பித்திருக்கிறோம். நம்முடைய புரட்டாசித் திருவோண உத்ஸவத்திற்கு நீரும் தர்மபத்னியும் கோயிலேற வாருங்கள்" என்றருளிச்செய்யக் கேட்டு, க்ருஷ்ணஸூரியும் ஹர்ஷோத்புல்லகபோலராய், தந்யோஸ்மி அநுக்ருஹீதோஸ்மி என்று விண்ணப்பஞ்செய்து ஸ்வாமி திவ்ய சரணாரவிந்தங்களை ஶிரஸ்ஸினால் வணங்கிநிற்க, பகவானுமிவ்வாறு நியமித்துவிட்டு ஸந்நிதிக்கு எழுந்தருளினாரென்றிப்படி ஸ்வப்னங்கண்டதை விடிந்தவாறே எழுந்து தம் தேவிகளிடத்தில் அருளிச்செய்ய தேவிகளும் அநுமோதித்து இருவரும் ஸந்துஷ்டர்களாயிருந்தனர்.

பிறகு புரட்டாசி ஶ்ரவணோத்ஸவ காலத்தில் நியமனப்படி க்ருஷ்ணஸூரியும் தேவிகளுடனே திருவிண்ணகரப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளிப் பெருமாளை மங்களஶாஸனம் செய்துவிட்டு நியமனம் பெற்றுக்கொண்டு அங்கோர் திருமாளிகையில் இராத்ரி திருக்கண்வளர்ந்தருளுமளவில் ஸ்வப்னத்தில் ஶ்ரீநிவாஸனும் திருவோணமாகிற தம்முடைய திருநக்ஷத்ர தினத்தன்று இராத்ரியில் ஒரு பரமைகாந்திரூபியாய் ஸவர்ணபாத்ரத்தில் தம்முடைய திவ்யகண்டாம்ஶ ப்ரவேஶயுக்தமான திவ்யக்ஷீரத்தையெடுத்துக்கொண்டு ஏகாந்தமாய் க்ருஷ்ணஸூரி கண்வளர்ந்தருளும் திருமாளிகைக்கெழுந்தருளி க்ருஷ்ணஸூரியை எழுப்ப அவரும் ஹர்ஷாபூரித ஹ்ருதயராய், ஸவிநயாஞ்ஜலிபந்தராய் ஸேவித்துநிற்க, பகவானும் அந்த க்ஷீரத்தை க்ருஷ்ணஸூரியிடம் கொடுத்து "இதை நீரும் உம்முடைய பத்னியும் புஜியுங்கள். இதினடுத்த புரட்டாசி மாதத் திருப்பூராடமாகிய விஷ்வக்ஸேநர் திருநக்ஷத்ரத்தில் கண்டாம்ஶமான தேஶிகன் புத்ரரராக அவதரிப்பார்" என்று அநுக்ரஹித்து அந்தர்தானமானவுடனே க்ருஷ்ணஸூரியும் அந்த திவ்யக்ஷீரத்தை மஹாப்ரஸாதமென்று பக்திபாரபரிதராய்ப் பெற்றுக்கொண்டு தாமும் தம்முடைய தேவிகளும் ஸ்வீகரித்ததாக ஸ்வப்நங்கண்டு ஆநந்தபரிதராய் விடிந்தவாறே தம் தேவிகளிடத்தில் ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டு ராயம்பேட்டைக்கு எழுந்தருளினார்.

பிறகு அந்த க்ஷீரம் புஜித்த தினம் முதலாக தேவிகளும் திருவயிறு வாய்த்து "கர்பேண புண்டரீகாக்ஷம்" என்றபடியே தேவகிப்பிராட்டி கண்ணனை கர்பத்தில் தரித்தாற்போலே கர்பத்தில் வஹித்து முன்பு தேஶிகன் பன்னிரண்டு வருஷம் கர்பத்தில் எழுந்தருளியிருந்த சாயையாலே, "ததஶ்ச த்வாதஶேமாஸே" என்கிறபடியே பன்னிரண்டாவது மாதத்தில் அதாவது கலி பிறந்து 4801 ஸம்வத்ஸரம் கடந்து விக்ரம வருஷம் புரட்டாசி மாஸம் ஶுக்லபக்ஷம் நவமி திங்கட்கிழமை கூடிய, ஸேநாபதியாழ்வான் திருநக்ஷத்ரமான, திருப்பூராட நக்ஷத்ரத்தில் தநுர்லக்னத்தில் கண்டாம்ஶமாகத் திருக்குடந்தை தேஶிகன் திருவவதாரம் செய்தருளினார்.

இவ்வவதாரத்தைக் குறித்து ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் "விஷமது பஹிஷ்குர்வந்" என்ற ஶ்லோகத்தில் "பவிதா தைவாத் கஶ்சித்" என்றும் "கஶ்சித் விபஶ்சித்தம:" என்றும் "ஸத்வர்தநீம் அநுவிதாஸ்யதி ஶாஶ்வதீம் ந:" என்றும் தாமே ஸூசிப்பித்தருளினாரிறே.

பின்பு ஶ்ரீக்ருஷ்ணஸூரிகளும் ஸ்வதிவ்ய தேஜோவிராஜித தாமனாயிருந்த குழந்தையின் தேஜஸ்ஸைக் கணிசித்து "இனி ஜகத்தில் தேஶிக ஸம்ப்ரதாயமாகிற

கல்பவ்ருக்ஷம் தழைத்தது" என்றும் ஆனந்தித்து மங்களஸ்நானம் செய்வித்துக் குமாரருக்கு யதாவஸ்த்திதமாக ஜாதகர்மம் செய்து, ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்துப் பத்துநாளும் கடந்த இரண்டாம் நாள் தம்முடைய க்ருஹாராத்யராகிய கோபாலனுடைய திருநாமத்துடன் தேஶிகாவதாரமாகையால் அதற்கு ஸூசகமான தேஶிகஶப்தத்தைச் சேர்த்து "கோபாலதேஶிகன்" என்று திருநாமம் சாத்தி ஆறாவது மாஸத்தில் அந்நப்ராஶனமும் பிறகு அப்தபூர்த்தி உத்ஸவமும் செய்து திருவிண்ணகரப்பன் ஸேவை செய்துவைத்து மூன்றாவது திருநக்ஷத்ரத்தில் சௌளமும், ஐந்தாவது திருநக்ஷத்ரத்தில் அக்ஷராரம்பத்தையும் செய்து கர்பாஷ்டமத்தில் ஶாஸ்த்ரீயமாக உபநயனம் செய்வித்து ப்ரஹ்மோபதேஶம் நடத்தினவளவிலே, கோபாலதேஶிகனும் ப்ரஹ்மவர்ச்சஸ் ப்ரபாதேதீப்யமாநராய், ப்ரஹ்மசர்யவ்ரதநிஷ்டராய் க்ருஷ்ணாஜிந யஜ்ஞோபவீத பலாஶதண்ட ப்ரப்ருதி ப்ரஹ்மசர்ய லக்ஷணோபேதராய் ஸ்ரீக்ருஷ்ணஸூரியினிடத்தில் பஞ்சஸம்ஸ்காரமும் பெற்று வேதாத்யயநமும் செய்தருளி புநருச்சாரணாகாங்க்ஷீ பதாநாம் வேஷ்டநேபரம்" என்கிறபடியே அதிமேதாவியாய் "ஶிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா கல்பஶ்சேத்யாதி ஷடங்கங்களையும், அங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: புராணம் தர்மஶாஸ்த்ரம் ச வித்யாஹேதாச் சதுர்தஶ" என்கிறபடியே தர்க்க, வ்யாகரண, மீமாம்ஸாதி ஸகலஶாஸ்த்ரங்களையும் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு தொடங்கி திவ்யப்ரபந்தங்களையும், தேஶிகப்ரபந்தங்களையும் ஸ்ரீநிகமாந்தமஹாதேஶிகனால் அருளிச்செய்யப்பெற்ற ஸ்தோத்ரங்களையும் ஸம்ப்ரதாயமாக அதிகரித்து "தர்க்கேஷு கர்க்கஶதியோ வயமேவ நாந்யே" என்கிறபடியே ஸர்வதந்த்ரங்களிலும் அதிநிபுணராய் ஶூபகுலப்ரஸூத துல்ய குணலக்ஷண ப்ரேயஸீ ஸஹசரித ஸகலதர்மராய், அங்கிஶாஸ்த்ரமாகிய வேதாந்த க்ரஹண ஸாபேக்ஷராயிருக்குமளவில் ஸ்ரீக்ருஷ்ணஸூரிகளும் குமாரரை நோக்கி,

சைத்ரே ஸ்ரீமதி மாஸே ய ஆர்த்ராயாமுதியாந்முநி: ।
உத்ப்ரேக்ஷிதோ தேஶிகோऽயம் லக்ஷ்மணார்யாத்மகோऽபி வா ॥
த்ரமிடோபநிஷத் பாஷ்யம் வ்யாக்ருதம் யேந சாதிமம் ।
ந்யாஸவித்யாதர்ப்பணேந ரமாஸித்தாஞ்ஜநேந ச ॥
யோ ஜகஜ்ஜீவயாமாஸ ம்ருதப்ராயம் குயுக்திபி: ।
ஶமோ தமஶ்ச வைராக்ய வாத்ஸல்ய கருணாதய: ॥
அந்யே ச ஸுகுணா வவ்ரு: யமேவ புவி நாபரம் ।
பிக்ஷாசர்யாதி ஸந்ந்யஸ்த தர்மாந் விதிவதாசரந் ॥
ஆஸ்தே ஸ்ரீரங்க நகரே ஸச்சிஷ்யகணவந்தித: ।

என்கிறபடியே மஹாமஹிமராய் "வேதாந்ததேஶிக ஸுபாஷித ஜீவநோக்திம்" என்கிறபடியே ஸ்ரீபாஷ்யகாராவதாரமாய்க் கோயிலிலே எழுந்தருளியிருந்து அதனாலே 'ஸ்ரீரங்கம் ஸ்வாமி' என்று அஸாதாரண நாமராய் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணிக்கொண்டு விளங்குகிற 'ஜ்ஞாநவைராக்யாதுஷ்டாநாஶேவதி' - ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜமஹாதேஶிகன் ஸந்நிதியிலே போய் ஸர்வார்த்தங்களையும் பெற்றுக்கொள்ளுமென நியமித்தருளினார். கோபாலதேஶிகனும் பித்ருநியமநத்தையும் அதையநுஸரித்த ஸ்ரீநிவாஸன் ஸ்வப்நநியமநத்தையும் சிரஸாவஹித்துக் கோயிலேற எழுந்தருளப் புறப்பட்டு, திருவிண்ணகருக்கு எழுந்தருளி ஸ்ரீநிவாஸனை மங்களாஶாஸநம் செய்து பக்திவிநம்ரராய் நிற்குமளவில் ஸ்ரீநிவாஸனும் அர்ச்சக முகமாய், "முன்பு நம் தூப்புல்பிள்ளை போலே நீரும் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராகக் கடவீர்" என்று அநுக்ரஹிக்க, கோபாலதேஶிகனும் தந்யோ஽ஸ்மியென்று நியமனம் பெற்றுக்கொண்டு அங்குநின்றும் புறப்பட்டுத் திருக்குடந்தைக்கு எழுந்தருளிக் கோமளவல்லியாரை முன்னிட்டு ஸ்ரீமதபர்யாப்தாம்ருதனை மங்களாஶாஸனம் செய்தருளி ஸ்வாமியினாலே குளிர கடாக்ஷித்தது க்ரஹிக்கப்பெற்று அங்குநின்று புறப்படும்போது, ஸ்ரீநிவாஸனும் 'ஸாக்ஷாத் ஸ்வாமி' ஸ்வப்நத்தில் எழுந்தருளி "நம் கோபாலதேஶிகன் உம்மிடம் வருவார். நீரும் அவருக்கு ஸர்வார்த்தங்களையும் உபதேஶியும்" என்று நியமிக்க, ஸ்வாமியும் விழித்து ஆஶ்சர்யப்பட்டுக்கொண்டிருக்கும் காலத்தில் கோபாலதேஶிகனும் கோயிலுக்கெழுந்தருளி வடதிருக்காவேரியில் நீராடி நித்யகர்மாநுஷ்டானம் செய்தருளி அந்த வடதிருக்காவேரி தீரத்திலிருக்கிற ஸாக்ஷாத் ஸ்வாமியினுடைய ஆஶ்ரமமெழுந்தருளி "ஸத்ஸமூஹம் குரோர்க்ருஹம் தூராத் ப்ரதக்ஷிணீகுர்யாத்" என்கிறபடியே ஆஶ்ரமத்தை ப்ரதக்ஷினம் செய்து தண்டம் ஸமர்ப்பிவித்து உள்ளே புகுந்து "தேவமிவாசார்யமுபாஸீத" என்றும், விதிப்படியே கண்ணிநுண்சிறுத்தாம்பின் ப்ரகாரம் ஆசார்யனைப் பரதேவதை என்று ப்ரதிபத்தி செய்து "ஸ்ரீரங்கநாதகுருபாத ஸரோஜஹம்ஸம்" என்கிற தனியனை அநுஸந்தித்து "உபவீதிநம் ஊர்த்வபுண்ட்ரவந்தம் த்ரிஜகத்புண்யபலம் த்ரிதண்டஹஸ்தம் ஶரணாகத ஸார்த்தவாஹமீடே ஶிகயாஶேகரிணம் பதிம் யதீநாம்" என்கிற க்ரமமாக எழுந்தருளியிருக்கும் ஸாக்ஷாத் ஸ்வாமியை தண்டம் ஸமர்ப்பித்து "ஶரீரமர்த்தம் ப்ராணாம்ஶ்ச ஸத்குருப்யோ நிவேதயத்" என்கிறபடியே, அடியேனை ஶிஷ்யனாக அங்கீகரித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்து குருஶுஶ்ருஷயாவித்யா என்றபடியே ஶுஶ்ருஷாநிரதராய்க் காத்திருந்தார். ஸ்வாமியும் ஸ்ரீநிவாஸன் ஸ்வப்நம் ஸாதித்ததைக்கொண்டு அப்படியே செய்யத் திருவுள்ளமாய் "ஸம்வத்ஸரம் ததர்த்தம்வா" என்கிறபடியே விவிதோபாயங்களாலே பரீக்ஷித்து இவருடைய ஜ்ஞாநாநுஷ்டான பக்த்யாதிகளையும் சோதித்து ஸச்சிஷ்யரென்று உகந்து

நல்லநாளில் உபக்ரமித்து நித்யக்ரந்த ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா ப்ரப்ருதி அநுஷ்டான க்ரந்தங்களையும் உபதேஶித்து, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலான ரஹஸ்யங்களையும் ஸ்ரீபாஷ்ய, கீதாபாஷ்யங்களையும் ஶ்ருதப்ரகாஶிகா - தாத்பர்யசந்த்ரிகா - ஶததூஷணீ - தத்த்வமுக்தாகலாப - ந்யாஸவித்யாதர்ப்பண, ஸ்ரீதத்த்வஸித்தாஞ்ஜனாதி க்ரந்தங்களையும் ப்ரஸாதித்தருளி, தம்முடைய ஆசார்யரிடத்தில் ஆறாயிரப்படி அதிகரித்தவராய், தாம் திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாக ஆறாயிரப்படியின் கருத்தை வெளியிட்டு அருளிச்செய்த இருபத்தினாலாயிரப்படியைத் தம்மிடத்தில் ஸேவித்தவராய் அத ஏவ தமக்கு ஸதீர்த்யரும் ஶிஷ்யருமான ஸ்ரீபாதுகாஸேவக ராமாநுஜ ஸ்வாமியிடத்தில் பகவத்விஷயத்தை க்ரஹிக்கும்படி நியமித்தருளினார். கோபாலதேஶிகனும் அப்படியே க்ரஹித்து அதிலும் அதிகமேதாவியாய் எழுந்தருளியிருந்தார். பிறகு கோபாலதேஶிகனும் பரஸமர்ப்பணமாகவேணுமென்று ப்ரார்த்திக்க ஸ்வாமியும் திருவுள்ளமுகந்து ஸ்ரீரங்கநாதன் திருவடிகளிலே மோக்ஷார்த்த பரஸமர்ப்பணத்தை ஆசார்யநிஷ்டையாகச் செய்தருளினார்.

இப்படி ந்யஸ்தபரராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒருநாள் ராத்ரி கோபாலதேஶிகனுடைய ஸ்வப்நத்தில் த்ரமிடஶ்ருதி ப்ரவர்த்தகரான ஸ்ரீமதபர்யாப்தாம்ருதன் ஸேவை ஸாதிக்க ஸ்வாமியும் பெருமாளுடைய தேஜஸ்ஸினாலும், தக்ஷிணபாகத்தில் ஸேவை ஸாதித்த கோமளவல்லித்தாயார் திருமேனி ஶோபையாலும் இவர் ஸ்ரீமதபர்யாப்தாம்ருதனே என்று நிஶ்சயித்துப் புளகாங்கிதராய்த் தெண்டனிட்டு விநயாவநம்ரஶிரஸ்கராய் நிற்க ஆராவமுதனும் "ஒ கோபாலதேஶிகனே! நீர் ஸத்ஸம்ப்ரதாய வ்ருத்திக்கு மூலஸ்தானமான திருக்குடந்தை நமது ஸந்நிதியிலிருந்து ஸம்ப்ரதாயப்ரவசநம் பண்ணக்கடவீர்" என்று நியமிக்க ஸ்வாமியும் தந்யோஸ்மி என்றங்கீகரிக்கப் பெருமாளும் அந்தர்தானமாய்விட்டார். இப்படி ஸ்வப்நம் கண்டு விழித்துக்கொண்டு ஆஶ்சர்யப்பட்டு மறுதினம் ப்ராத: காலத்தில் தம்முடைய ஆசார்யரான ஸாக்ஷாத் ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை விஜ்ஞாபனம் பண்ண, ஸாக்ஷாத் ஸ்வாமியும் உகந்து ஸ்ரீதேஶிக ஸம்ப்ரதாயஸ்த - ப்ரஹ்மவித் - பூயிஷ்டமான செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தையிலிருந்து ஸம்ப்ரதாயப்ரவசனம் பண்ணுவதுதான் “பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய” என்றருளிச்செய்த தேஶிகன் திருவுள்ளத்துக்கு ஒத்ததாயும் ஆராவமுதன் திருவுள்ளமாயுமிருப்பதால் அப்படியே செய்யுமென்று நியமித்து ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசனத்திற்கும் க்ரந்தகரணங்களுக்கும் உபயுக்தஜ்ஞான ஸம்ருத்திக்காக ஸ்ரீதேஶிகபரம்பராகதமான ஸ்ரீஹயக்ரீவ

மஹாமந்த்ரத்தை உபதேஶித்து ஸ்வாமியை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதிக்கெழுந்தருளி, கோபாலதேஶிகன் மூலமாக ஸத்ஸம்ப்ரதாய அபிவ்ருத்தியாக வேண்டியதற்காக "ஸத்ஸம்ருத்திம் ச யுக்தாம் நித்யம் யாசேதநந்ய:" என்கிறபடியே ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் பரஸமர்ப்பணம் செய்து ஸ்ரீகோபாலதேஶிகனுடன் மங்களாஶாஸனம் செய்யும் காலத்தில் ஸ்ரீரங்கநாதனும் குளிரக்கடாக்ஷித்து அர்ச்சக முகமாக "நம் தூப்புல்பிள்ளை போல் நீரும் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராகக்கடவீர்" என்று கோபாலதேஶிகனை அநுக்ரஹித்து வரிசைகளும் ப்ரஸாதிக்க, அதுகளை ஶிரஸாவஹித்து நியமனம் பெற்றுக்கொண்டு ஸாக்ஷாத் ஸ்வாமியிடத்தில் "ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்" என்ற அநுக்ரஹம் பெற்றுக்கொண்டு திருப்பேர்நகர், திருக்கண்டியூர், தஞ்சைமாமணிக்கோயில், திருக்கூடலூர், கபிஸ்தலம், திருவாதனூர், புள்ளம்பூதங்குடி, திருமண்டங்குடி முதலிய திவ்யதேஶங்களை மங்களாஶாஸனம் செய்துகொண்டு கும்பகோணமிதி க்யாதம் க்ஷேத்ராணாமுத்தமோத்தமம் | லக்ஷ்மீ ஸரோவரம் நாம யத்ரதிஷ்டதிஸம்ப்ரதி | நிர்மிதம் தபஸா தேவ்யா ஶுத்தாந்த மநஸாதயா | ஆதாவபியத்க்ஷேத்ரம் கும்பகோணம் விதுர்புதா: | புண்யக்ஷேத்ராணி ஸர்வாணி தீர்த்தாநி ஸுமஹாந்தி ச | வஸந்தி தத்ரவை ஸோமோ ஹ்யநிஶம் புண்யகாங்க்ஷயா | தஸ்யவை ஸ்த்ருஶம் நாஸ்தி த்ரிஷு லோகேஷு ஸாம்ப்ரதம் | அந்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்யக்ஷேத்ரே விநஶ்யதி புண்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் வாரணாஸ்யாம் விநஶ்யதி | வாரணாஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே விநஶ்யதி | கும்பகோணே க்ருதம் பாபம் கும்பகோணே விநஶ்யதி | ப்ரஹ்மஹத்யாதயோ கோரா மஹாபாதகராஶய: | கும்பகோணே ஶயாநஸ்ய விஷ்ணோர் நஶ்யந்தி தர்ஶநாத் | யோ நர: கும்பகோணேஸ்மிந் க்ஷணார்தமபிதிஷ்டதி | கரஸ்தம் தஸ்யகைவல்யம் கிமுதாந்யா விபூதய: | என்றிப்படி ஶேஷதர்மாதி புராணங்களில் ப்ரஸித்த வைபவமுள்ளதாயும் "காசி முதலான நன்னகரி" என்கிறபடியே ஸப்த முக்திக்ஷேத்ரத்திலும் ப்ரதாநமான வாரணாஸியைக்காட்டிலும் அதிகமாய், ஆழ்வார்களாலும் பரந்த காவிரிக்கரைக்குடந்தை என்றும் சூழ்புனல் குடந்தையே தொழுது என்றும் சேர்ந்த திருமால் கடல் குடந்தை என்றும் திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை என்றும் பொன்மணி கொழிக்கும் பூங்குடந்தை என்றும், மணிவண்ணன் தன் குடந்தை என்றும் ஏழு ஆழ்வார்கள் உகந்தருளின நிலமாய் திவ்யப்ரபந்தப்ரதர்ஶகரான ஆராவமுதன் நித்யவாஸ ஸ்தலமாய், திருமழிசைப்பிரான் முதலான செழுமாமணிகள் சேருமூராய் அவர் யோகஸ்தலமாய் திருப்பள்ளி ஸ்தலமாய்க் கீழத்திருவரங்கமென்று பேசப்பட்டதாயும் ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கில் ஐந்தாவது யோஜனையாகிய ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின்

கிழக்கெல்லை ஸ்தலத்தில் ஸ்ரீரங்கநாதனே ஸ்ரீ கோமளவல்லித்தாயாருக்கு ஸேவை ஸாதிக்கவேண்டியதற்காக எழுந்தருளியிருப்பதாய், ஸ்ரீரங்கமாஹாத்ம்யம், கும்பகோண மாஹாத்ம்யம், ஶேஷதர்மம் முதலியதுகளில் ப்ரஸித்தமாயிருக்கிற திருக்குடந்தை திவ்யதேஶத்தை அணுகி, இதோ விஷ்ணுபதோல்லாஸி நாளிகேரவநோபரி । த்ருஶ்யதே கோபுரம் ஶைத்த கும்பகோணபுரீ துரி ॥ என்கிறபடியே தூரத்தில் திருக்கோபுரங்களைக்கண்டு தெண்டம் ஸமர்ப்பித்து திவ்ய க்ஷேத்ரத்திற்குள்ளே புகுந்து திருக்காவேரியில் சக்ரதீர்த்தத்தில் அநுஷ்டானம் செய்தருளி விஜயவல்லியார் புருஷகாரமாகத் திருவாழியாழ்வானைத் தொழுது ஸ்ரீவராஹநயினாரையும் திருவடிதொழுது திருமழிசைப்பிரான் திருப்பள்ளியை வணங்கி, பெரியவீதி வலமாகவெழுந்தருளித் திருமங்கையாழ்வார் கைங்கர்யமான பெரிய திருத்தேரை தண்டம் ஸமர்ப்பித்து லக்ஷ்மீநாராயணஸ்வாமி கைங்கர்யமான பெரிய திருக்கோபுர நயினாரை ஸேவித்து ஸங்க்ரமணத்தேர், சக்ரவர்த்தித் திருமகன், ஶரநாராயணன், ஸ்ரீ கூரத்தாழ்வான், ஸ்ரீபாஷ்யகாரர், திருமங்கைமன்னன் இவர்களைத் திருவடிதொழுது நிர்மிதம் தபஸா தேவ்யா ஶுத்தாந்த மநஸா தயா । லக்ஷ்மீ ஸரோவரம் நாம என்றும், கங்காதி ஸர்வதீர்த்தாநி ஸங்க்ருஹ்யச புரா ரமா । நிர்மமே ஸர்வ ரக்ஷார்த்தம் பாவநம் தத்ஸரோவரம் । வர்ஷே வர்ஷே ஸமாயாந்தி ப்ரஹ்மாத்யாஸ் ஸர்வதேவதா: । ஸ்நாத்வா முநிவராஸ் ஸர்வேயாந்தி ஸ்தாநம் ஸ்வகம் ஸ்வகம் ॥ திநமேகம்து ய: குர்யாத் ஸ்நாநம் தத்ர ஶுதாகர । ப்ராப்நோதி விஷ்ணுலோகம்ஸ ஸர்வபாப விவர்ஜித: ॥ என்றும் பேர் பாடித் தண்குடந்தை நகரும் பாடி, பொற்றாமரைக்கயம் நீராடப்போனாள் என்றும், சொல்கிறபடியே அத்யந்த ப்ரஶஸ்தமான பொற்றாமரையை ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் தீர்த்தம் ஸ்வீகரித்து, மேலத் திருவாசலாலே ஸந்நிதிக்குள்ளே புகுந்து ப்ரதக்ஷிணமாக ஆண்டாளை ஸேவித்துத் தூனிலாமுற்றத்தே தண்டனிட்டுப் பெரியாழ்வாரை வணங்கி, சிறியகோபுரத்தாலே கிழக்கே சென்று த்வஜஸ்தம்பத்தை ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் திருக்கச்சிநம்பி, முதலாழ்வார், நாதமுனி, ஆளவந்தார் முதலானோரைப் பணிந்து ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேஶிகன் ஸந்நிதியிலே எழுந்தருளி, விஹித புவந ரக்ஷா வேதசூடார்யநாமா குமதிதநுஜஸங்கத்வம்ஸ நாயாவதீர்ணா । நிரவதி மஹிமா ஸா தேவதா மாநஸே மே விலஸது விநதாநாம் காமநாம் ஸந்துஹாநா என்றும் அகிலபுவநரக்ஷா ஸாதநாயாவதீர்ணே குமதிகலிவிலாஸத்வாந்த திக்மாம்ஶுஜாலே । நிரவதி கருணாப்தெள வேதசூடாகுரெளமே பவது பரமபக்தி: ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரே என்றும் தேஶிகனை தெண்டம் ஸமர்ப்பித்து மங்களாஶாஸனம் செய்து விடைபெற்று உள்ளே புகுந்து திருமடப்பள்ளியை கடாக்ஷித்து, நாச்சியாரை ஸேவித்துப் பெரிய திருமண்டபத்திலுள்ள கண்ணன், ஸ்ரீராமன், கோபாலன், யாகஶாலை இவைகளை

ஸேவித்து நாழிகைவட்டில் வாசலைக்கிட்டி ஜயவிஜயர்களை தண்டம் ஸமர்ப்பித்து அவர்கள் அநுமதியாலே ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, கோமளவல்லியாரை ஹேமர்ஷிவம்ஶகலஶார்ணவ கல்பவல்லி ஶார்ங்கப்ரியே ஜநநி கோமளவல்லி தேஹி । பூய: பலாந்யதுலிதாநி பதாஶ்ரிதாநாம் ஹஸ்தாபசேய ஸுபலே ஜகதாம் ஸவித்ரி என்று மங்களாஶாஸனம் செய்தருளி, ப்ரதக்ஷிணமாக அத்திருச்சுற்றிலுள்ள பாதாள ஸ்ரீநிவாஸன், தீராவினை தீர்க்கும் பெருமாள், சக்ரவர்த்தித்திருமகன், ஸேனைமுதலியார் இவர்களை ஸேவித்துத் திருக்கிணற்றுக்கருகே வைதிக விமானராஜனை ஸேவித்துப் பரமபதஸோபாநத்தில் விவேக நிர்வேத - இத்யாதி ஸோபாநங்களுக்கு நிதர்ஶகமாக நவஸோபாநங்களாலே உள்ளேயேறியருளி, திருமாமணிமண்டபத்திலே பெரியதிருவடிநயினாரைத் தொழுது திருமஞ்ஜனப்பலகை அருகே ஸாஷ்டாங்கமாக த்வாதாஶ ப்ரணாமங்களைச் செய்தருளி, த்வாரபால அநுமதியாலே உள்ளே புகுந்து ஆராவமுதத்தைப் பருகி ஆராவமுதேயென்கிற திருவாய்மொழியையும், ஆவியே அமுதே என்கிற பாட்டையும் அநுஸந்தித்துப் பெரியபெருமாளை ஆழ்வார் அமலனாதிபிரானாலும், தேஶிகன் பகவத் த்யாந ஸோபாநத்தாலும் அநுபவித்தாப்போலே ஸ்வாமியும் ஸ்ரீஆராவமுதனைப் பாதாதி கேஶாந்தமாக அநுபவிக்கத்தொடங்கி அபர்யாப்தாம்ருத த்யாந ஸோபாநத்தை அருளிச்செய்து ஹர்ஷஸாகரநிமக்நராய் நிற்குமளவில் ஆராவமுதனும் மறுபடி அர்ச்சகமுகமாய் "ஓய் கோபாலதேஶிகனே! உமக்குத் திருக்குடந்தை தேஶிகன் என்று திருநாமம் கொடுத்தோம். நம் தேஶிகனைப்போலே பரமதநிரஸந பூர்வகமாக ஸ்வமதஸ்தாபனம் பண்ணிக்கொண்டு “அத்ரைவ ஸ்ரீரங்கேஸ்ஸுகமாஸ்ஸ்வ" என்கிறபடியே நம்முடைய துளஸீ நந்தவனத்திலிருந்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் பண்ணுமென்று நியமிக்க, அந்த நியமனத்தை ஶிரஸ்ஸாலே வஹித்து வரிசைகளையும் பெற்றுக்கொண்டு நாச்சியாரையும் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி விடைபெற்று அதிமனோஹராதிபாவநாதி விவிக்தமான ஆராவமுதனுடைய துளஸீ காநத்தில் ஏகதேஶத்தில் ஒரு பர்ணசாலையிலெழுந்தருளியிருந்துகொண்டு ஸ்ரீபாஷ்யாதிகளை ஸச்சிஷ்யர்களுக்கு ப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளி இருந்தார். இப்படியிருக்கிற காலத்திலே தேஹயாத்ரோசிதமான பூர்வஸ்வம் (பூர்விக சொத்து முழுதும்) ப்ரஹ்மவித்யா க்ரஹணத்திற்காக ஸ்ரீரங்கம் எழுந்தருளுகிற காலத்திலேயே ப்ரஹ்மவித்துக்களுக்கு ஸமர்ப்பிதமாகையால், இப்பொழுது தேஹயாத்ராநுரூப வ்ருத்திக்கு தேஶிகபரிக்ரஹத்தினாலே தேஶிகவ்ருத்தியென்று திருநாமமான உஞ்சவ்ருத்தியை அநுஷ்டித்து தேஹயாத்ரையை நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸ்வாமி உஞ்சவ்ருத்திக்கு வீதிக்கெழுந்தருளுகிற காலத்தில் ஸ்வாமியினுடைய தேஜஸ்ஸை ஸேவித்து தேஶிக ஸம்ப்ரதாயஸ்தர்களெல்லோரும் நிகமாந்ததேஶிகன் எழுந்தருளினால் எப்படியோ, அப்படி நிரதிஶய ப்ரதிபத்தியுடன் தண்டம் ஸமர்ப்பித்து விநீதர்களாகவிருந்து இப்படிப்பட்ட மஹான் அவதரித்து ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் பண்ணுவதினாலே இனிக் கலியுகத்தின் உபத்ரவம் ஜகத்துக்கு நீங்கி க்ருதயுகம் ஆகிவிட்டதென்று ஸந்தோஷித்தார்கள். இப்படி எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒரு தினத்தில் ப்ராத:காலத்தில் ஆராவமுதனை மங்களாஶாஸனம் செய்துவிட்டு ஶ்ரீதேஶிகன் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாஶாஸநம் செய்து தேஶிக ஸஹஸ்ரநாம க்ரந்தத்தைச் செய்தருளி அத்தாலே ஶ்ரீதேஶிகனை ஸ்தோத்ரம் செய்துகொண்டு பக்திபாராவநமித ஶிரஸ்கராய் ஹர்ஷாஶ்ருபூர்ண நேத்ரராய் புளகாஞ்சிதகாத்ரராய் நிற்கும் காலத்தில் ஶ்ரீதேஶிகனும் அர்ச்சகமுகமாக "ஓய் கோபாலதேஶிகனே! நீர் நம்முடைய ஶ்ரீ ரஹஸ்யத்ரயஸார ப்ரப்ருதி க்ரந்தங்களுக்கு வ்யாக்யாநம் செய்து விஶேஷமாக ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யவேண்டியதாகையால் அதற்கு உபயுக்த ஜ்ஞாநாத்யபிவ்ருத்திக்காக உம்முடைய ஆசார்யோபதிஷ்டமான நம் லக்ஷ்மீஹயவதந மந்த்ரத்தை ஶ்ரீஆராவமுதன் ஸந்நிதி வைதிக விமாநச்சாயையில் புரஶ்சர்யாரூபமாக விஶேஷித்து ஜபம் பண்ணும்" என்றநுக்ரஹிக்கத் திருக்குடந்தை தேஶிகனும் அநுக்ருஹீதோஸ்மி என்று நியமனம் பெற்றுக்கொண்டு 45 தினம் நியமம் தவறாமல் ஶ்ரீஆராவமுதன் ஸந்நிதி வைதிக விமாநச்சாயையில் எழுந்தருளியிருந்து ஹ்ருதய கமலத்தில் ஶ்ரீஹயக்ரீவ த்யானத்துடன் ஹயக்ரீவ மந்த்ர ஜபம் செய்யும்போது 45-வது தினத்தில் த்யான காலத்தில் ஶ்ரீஹயக்ரீவன்,

ஶங்காபஶ் ஶங்கசக்ரே கரகமலயுகே புஸ்தகஞ்சாந்யஹஸ்தே
வ்யாக்யா முத்ராம் புரஸ்தாத் தததபரகரே மண்டலஸ்தஸ்ஸுதாம்ஶோ:
ஆஸீந: புண்டரீகே துரகவரஶிரா: பூருஷோ மே புராண:
ஶ்ரீமாந் விஜ்ஞாநதாயீ மநஸி விலஸதாத் ருக்யஜுஸ்ஸாமரூப: ||

என்கிறபடியே சந்த்ரமண்டல மத்யஸ்தராய், திவ்யதேஜோதேதீப்யமானராய், ஸேவை ஸாதிக்கத் திருக்குடந்தைதேஶிகனும் ஹர்ஷாபூரிதஹ்ருதயராய், ஆநந்தாஶ்ரு பரிப்லுதராய், புளகாங்கித தேஹராய் ஶ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்துக் கொண்டு ஆஶ்சர்ய ஸாகராந்தர்நிமக்நராய், பத்தாஞ்ஜலிபுடராய் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஶ்ரீஹயக்ரீவனும் குளிரகடாக்ஷித்துத் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி, ப்ரதிஷ்டை செய்து ஆராதித்துக்கொண்டு ஸம்ப்ரதாய ப்ரவசன க்ரந்தகரணாதிகளை அநுஷ்டிக்கும்படி நியமிக்க ஸ்வாமியும் தந்யோஸ்மி அநுக்ருஹீதோஸ்மி என்று நியமித்ததை ஶிரஸாவஹித்து

அந்நியமனப்படியே ஸ்ரீஹயவதந திவ்யமங்கள விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி, ஸ்ரீஆராவமுதன் ஸந்நிதியில் திருப்ரதிஷ்டை செய்தருளும்போது,

ஸ்தாபகஸ்ய தபோயோகாத் பூஜாயாஶ்சாதிஶாயநாத் ।
ஆபிரூப்யாச்ச பிம்பஸ்ய ஸாந்நித்யம் குருதே ஹரி: ॥

என்கிறபடியே மஹாதபோநிஷ்டரான ஸ்வாமியினுடைய ப்ரார்த்தனாமஹிமையாலே, ஸங்கர்ஷணாத் ஹயக்ரீவ: என்கிற க்ரமமாக ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீஸங்கர்ஷண பகவானுடைய திருமேனியிலிருந்து பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே என்னும் பிரகாரமாக ஒரு திவ்யஜோதிஸ்ஸானது தேதீப்யமானமாய்க்கொண்டு அருகிலிருந்த ப்ரஹ்மவித்துக்கள் எல்லோரும் ஸேவித்து ஆஶ்சர்யப்படும்படியாக வந்து திவ்யமங்களவிக்ரஹத்தில் நீரக்ஷீரந்யாயேந கலந்தபடியைக்கண்டு எல்லோரும் க்ருதயுகத்தில் ஸம்பாவிதமான இந்த ரீதி இக்கலியுகத்தில் கூட ஸ்வாமியினுடைய தபோபலத்தினால் நேர்ந்ததைப்பற்றி அத்யாஶ்சர்யமடைந்தார்கள். அந்த திவ்யமங்களவிக்ரஹத்தை ஸ்ரீஆராவமுதன் ஸந்நிதியில் சில நாள் எழுந்தருளப்பண்ணிவைத்துப் பிறகு திருமாளிகைக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டெழுந்தருளி ஸ்ரீஹயவதந திவ்யமங்களவிக்ரஹத்துடன் குலபாரம்பர்யமாக ஆராதிதரான ஸ்ரீகோபாலனையும் ஆராதித்துக்கொண்டு ஸம்ப்ரதாயப்ரவசனத்துடன் எழுந்தருளியிருந்தார். இப்படியிருக்கையில் ஸ்ரீரங்கத்தில் ஸாக்ஷாத் ஸ்வாமி பகவத்விஷயம் 6000-ப்படிக்கு வ்யாக்யானமாகிய 24000-ப்படி க்ரந்தத்தைச் செய்தருளி, ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்துக்கு ஸ்ரீஸாராஸ்வாதிநீ க்ரந்தத்தைச் செய்தருளத் திருவுள்ளம் பற்றி ஸாங்கப்ரபதநாதிகார பர்யந்தமாக 12 அதிகாரத்திற்கு வ்யாக்யானமான காலத்தில் ஒரு தினம் ப்ராத:காலத்தில் ஸ்வாமி ரங்கநாதன் ஸந்நிதிக்கு மங்களாஶாஸனத்திற்கு எழுந்தருளினபோது ஸ்ரீரங்கநாதன் அர்ச்சக முகமாக நம் தூப்புல்பிள்ளையின் அம்ஶமாகிய கோபாலதேஶிகனை மேல்பாகம் ஸாராஸ்வாதிநீ க்ரந்தத்தைப் பூர்த்தி பண்ணும்படி நியமித்துவிட்டு நீரும் கொஞ்ச காலத்தில் நம் பெரியவீடு வந்துகாணும் என்று நியமிக்க ஸ்வாமியும் ஆஶ்சர்யமுற்று தந்யோஸ்மியென்று விஜ்ஞாபித்து நியமனம் பெற்று ஆஶ்ரமம் எழுந்தருளி இந்த ஸமாசாரத்தைத் திருக்குடந்தையில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீதிருக்குடந்தை தேஶிகனுக்கு ஶிஷ்யர்கள் முகமாய் நியமித்தனுப்ப, திருக்குடந்தை தேஶிகனும் நியமனப்படி ஸ்ரீஹயக்ரீவனையும், ஸ்ரீகோபாலனையும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி ஸாக்ஷாத்ஸ்வாமி ஆஶ்ரமம் சென்று விநயாவநம்ர ஶிரஸ்கராய் த்வாதஶ ப்ரணாமங்களைச் செய்து பத்தாஞ்ஜலிபுடராய் நிற்கும் காலத்தில் ஸாக்ஷாத்ஸ்வாமியும் "நாம் அஶக்தரானோம். இந்த

ஸாராஸ்வாதிநீ க்ரந்தத்தை நும்மைக்கொண்டு பூர்த்தி பண்ணிவைக்க ரங்கநாதன் திருவுள்ளமாகையால் நீர் இதைப் பூர்த்தி செய்யும்" என்று நியமிக்கத் திருக்குடந்தை தேஶிகனும் “கிஶோரீவ குரும் பாரம் நவோடுமஹமுத்ஸஹே” என்றாப்போல ஸ்வாமியினுடைய ரீதியை அநுஸரித்து உத்தர ஸாராஸ்வாதிநீ செய்ய அடியேன் எவ்வாறு ஶக்தனாவேன் என்று திகைத்துநிற்க, ஸாக்ஷாத்ஸ்வாமியும் “ஹ்ருத்யா ஹ்ருத்பத்ம ஸிம்ஹாஸந ரஸிக ஹயக்ரீவ ஹேஷோர்மி கோஷ க்ஷிப்த ப்ரதியர்த்தி த்ருப்தி:” என்கிறபடி ஸ்ரீஹயக்ரீவன் உம்மிடத்திலநுப்ரவேஶித்துப் பூர்த்தி பண்ணிக் கொள்ளுவராகையால் நீர் ஈஷத்தும் சிந்திக்கவேண்டாமென்று நியமித்தருளினார். திருக்குடந்தை தேஶிகனும் "வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம் உள்ளத்தெழுதியது" என்கிறபடியே ப்ரத்யக்ஷ ஹயக்ரீவனாகிய அவ்விடத்திய க்ருபையிருக்கும் பக்ஷத்தில் அடியேனுக்கு துஷ்கரமொன்றுமில்லையென்று விஜ்ஞாபித்து நியமனம் பெற்றுக்கொண்டு ஆஶ்ரமத்திற்கெழுந்தருளி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் த்வயாதிகாரத்திற்கு வ்யாக்யானம் செய்தருளி அதை ஸாக்ஷாத்ஸ்வாமி ஸந்நிதியில் ஸமர்ப்பித்தவாறே ஸ்வாமியும் கடாக்ஷித்தருளி, தம்முடைய பூர்வவ்யாக்யான ரீதியை அநுஸரித்தும், தேஶிகனுடைய நிகூட தாத்பர்யத்திற்கு விஶத ப்ரகாஶகமாயும் ஶ்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ர தாத்பர்யங்களை அடியொற்றியும் இருக்கிறபடியைக் கணிசித்து ரொம்பவும் ஆஶ்சர்யமடைந்து இப்படிப்பட்ட தேஶிக ரஹஸ்ய நிகூட ஹ்ருதய ப்ரகாஶநம் செய்தபடியால் உமக்குத் திருக்குடந்தை தேஶிகன் என்று ஸ்ரீஆராவமுதன் நியமித்த நாமதேயம் ஒக்கும் என்று அநுக்ரஹித்து இப்படியே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாராவஶிஷ்ட வ்யாக்யானத்தையும் பூர்த்தி செய்யும்படி நியமிக்க அப்படியே ஸ்வல்ப காலத்திலேயே அவஶிஷ்டமான 20-அதிகார வ்யாக்யானத்தையும் பூர்த்தி செய்து முடிவில் கோபாலதேஶிக தாஸேந விலிகிதாயாம் உத்தர ஸாராஸ்வாதிந்யாம் என்று முத்ரையிட்டு ஸாக்ஷாத் ஸ்வாமியிடம் ஸமர்ப்பித்தார். ஸ்வாமியும் க்ரமேண முழுமையும் கடாக்ஷித்து அதி ஸந்தோஷத்துடன் இனி நம் ஸம்ப்ரதாயத்திற்கு இந்த க்ரந்தம் காலக்ஷேப க்ரந்தமாக இருக்கவேண்டியது என்று நியமித்துத் தம்மிடத்தில் ஆஶ்ரயிக்க வருவோரையும் "நாம் அஶக்தரானோம்" இனித் திருக்குடந்தைதேஶிகன் ஸந்நிதியில் ஆஶ்ரயிக்கும்படி நியமித்துத் தாமும் ஸ்வல்பகாலம் நோவு சாத்திக்கொண்டு த்யாநபரராக எழுந்தருளியிருந்து திருக்குடந்தை தேஶிகன் ஶிரஸ்ஸில் தம்முடைய திருவடிகளை வைத்து நம் தேஶிக ஸம்ப்ரதாயத்தை உபதேஶாநுஷ்டாபந க்ரந்தகரணங்களாலே தழைக்கச்செய்யுமென்று நியமித்து ஸ்ரீரங்கநாதன் திருவடிகளையும் ஸ்வாசார்யபூத ஸ்ரீரங்கநாதஸ்வாமி திருவடிகளையும் த்யானித்துக்கொண்டு தன்னடிச்சோதிக்கு எழுந்தருளத் திருக்குடந்தை தேஶிகனும் ஸ்வாமியினுடைய பூர்வாஶ்ரம குமாரராகிய

வேதாந்தாசார்யரைக் கொண்டு தாம் மற்ற ஶிஷ்யர்களுடன் கூட இருந்து கைங்கர்யத்தைப் பரிஷ்காரமாக நடப்பித்து ஸம்வத்ஸர பர்யந்தம் தாம் ஶ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து கைங்கர்யங்களைப் பூர்த்தி செய்து ஶ்ரீரங்கநாதன் நியமனம் பெற்று மறுபடியும் திருக்குடந்தைக்கு எழுந்தருளினார்.

பிறகு பகவந்நியமனத்தினால் ஶ்ரீபாஞ்சராத்ரரக்ஷா விருத்தாநுஷ்டானங்களை நிவர்த்திப்பிக்க வேண்டியதற்காக ஶ்ரீபாஞ்சராத்ரரக்ஷா வ்யாக்யாநரூபமாக ஆஹ்நிக க்ரந்தத்தையும், ஶரணாகதி ஶாஸ்த்ரார்த்த விவரணமான நிக்ஷேபசிந்தாமணி ப்ரதமாதிகாரத்தையும், ஆஹ்நிக விவரணமான த்விதீயாதிகாரத்தையும், திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு, ஶ்ரீபாஷ்யம் இதுகளுக்கான ஸங்க்ரஹமான வ்யாக்யானமும், ஜயந்த்யாதி நிர்ணயங்களையும் ரங்கராமாநுஜ முநிமுகை: ப்ராக்தந தேஶிகை: । நிர்ணீதா ஶ்ரீஜயந்தீயம் ஸந்மார்க்கேண ஸதாமுதே ததாபி தத்ர ஸாஸூயை: ஹைது கைஸ்தத்ர தத்ரச ஸாதிதம் த்வந்யதா பாவம் திரஸ்கர்த்தும் இஹோத்யம: என்று ப்ரதிஜ்ஞை செய்தருளி, ஸாத்விகர்களுக்கு உண்டான கலக்கத்தைத் தெளிவித்தருளினார்.

பிறகு ஒரு காலத்தில் ஶ்ரீமதபர்யாப்தாம்ருதனுக்கு, முந்தி ஶ்ரீநாதமுனிகள் மூலமாக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனத்தில் திருவுள்ளம் உண்டானாப்போலே ஓர் விசித்திரமான திருவுள்ளம் உண்டாயிற்று. அதென்னவெனில் முந்தி நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு நாதமுனி, ஆளவந்தார், ஶ்ரீபாஷ்யகாரர் - இம்மூவரும் ப்ரவர்த்தகர்களாக இருந்தார்கள். இப்போது அந்த மூன்று முனிகளின் அம்ஶமாக மூன்று முனிவர்களை அவதரிப்பித்து அவர்களை நம் திருக்குடந்தை தேஶிகனிடத்தில் ஆஶ்ரயிக்கச்செய்து அவர்கள் மூலமாக ஸாத்விக ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பித்து லோகோஜ்ஜீவநம் செய்விக்கவேணுமென்று திருவுள்ளமுண்டாகி அந்த மூன்று முனிவர்களில் நாதமுனிகள் அம்ஶமாகத் தம்ஸங்கல்பத்தாலே திருமாலிருஞ்சோலை அருகிலிருக்கும் வத்தராயிருப்பு ஶ்ரீக்ராமத்தில் ஏற்கனவே அவதரித்திருந்த ஸ்வாமிக்கும், ஆளவந்தார் அம்ஶமாகத் தென்னாட்டில் செய்யானம் என்கிற ஶ்ரீக்ராமத்தில் அவதரித்திருந்த ஸ்வாமிக்கும், ஶ்ரீபாஷ்யகாரருடைய அம்ஶமாகத் திருக்குடந்தைக்கு ஸமீபத்தில் வழுத்தூர் என்கிற ஶ்ரீக்ராமத்தில் அவதரித்திருந்த ஸ்வாமிக்கும், ஸ்வப்நத்தில் ஸேவை ஸாதித்து நீங்களும் ஶ்ரீரங்கம் ஸ்வாமி ஸம்ப்ரதாயத்தில் துரீயாஶ்ரமம் க்ரஹித்துக்கொண்டு, திருக்குடந்தை தேஶிகன் ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்யுங்கோள் என்று நியமித்ததுடன் திருக்குடந்தை தேஶிகனுக்கும் ஸ்வப்நத்தில் மேற்கூறியபடி "நாதமுனி ப்ரப்ருதி மும்முனிவர்களின் அம்ஶமாகிய மும்முனிவர்கள் வருவார்கள். அவர்களுக்குப் பரிஶுத்தமான நம் தேஶிக

ஸம்ப்ரதாயத்தை உபதேஶியும்" என்று நியமிக்கத் திருக்குடந்தை தேஶிகனும் அந்த நியமனத்தை ஶிரஸாவஹித்து எம்பெருமானுக்கு இப்படி விலக்ஷணமாகத் திருவுள்ளம் உண்டானதை நினைத்து ஆஶ்சர்ய ஸாகராந்தர்நிமக்னராய் எழுந்தருளியிருக்க பின்பு சில காலமானவாறே அம்மூன்று ஸ்வாமிகளும் பகவந் நியமனப்படித் தனித்தனியே, துரீயாஶ்ரமத்தை க்ரஹித்து ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன், ரங்கநாத மஹாதேஶிகன், வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகன் என்ற திருநாமங்களை வஹித்து, பகவந்நியமனப்படியே திருக்கோவலூரில் பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார் இம்மூவர்களும் சேர்ந்தாப்போலே திருக்குடந்தை ஆராவமுதன் ஸந்நிதியில் ஒரு நாள் ப்ராத:காலத்தில் தனித்தனியே எழுந்தருள மூவரும் சேர்ந்து தங்களுக்கு பகவந்நியமனமானதை ஒருவருக்கொருவர் சொல்லி ஆஶ்சர்யப்பட்டு, பெருமாளை மங்களாஶாஸனம் செய்து நியமனம் பெற்றுக்கொண்டு திருக்குடந்தை தேஶிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார்கள். அந்த ஸமயத்தில் திருக்குடந்தை தேஶிகன் அபிகமநாராதனம் செய்தருளி உபாதாநத்திற்கு ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்ரீபாஷ்ய ஶ்ருதப்ரகாஶிகாதி க்ரந்தங்களை ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளி இருக்க அந்த மூன்று முனிகளும் ஸ்வாமியினுடைய தேஜஸ்ஸையும் அநுஷ்டான நையத்யத்தையும் "ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே" இதி ஶ்லோகோக்த ஆசார்ய குண பூர்த்தியையும் ஸேவித்து ஸ்வாமி தேஶிகாவதாரமே; இதில் ஸந்தேஹமில்லை என்று நிஶ்சயித்து ஸாஷ்டாங்கமாகத் தெண்டம் ஸமர்ப்பித்து "ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகனால் ப்ரவர்த்திக்கப்பட்ட ஸம்ப்ரதாயம் ஸங்கேதாதிக்ருத விபரீத - ஆசரணாதி தோஷரஹிதமாய் இந்தவிடத்தில் தானிருப்பதாய் ஜகத்விக்யாதம் ஆகையாலே அந்த தேஶிகாவதாரமாகிய இந்த இடத்திலிருந்தே அந்தப் பரிஶுத்தமான ஸம்ப்ரதாயத்தை க்ரஹிக்கும்படி ஸ்ரீமதபர்யாப்தாம்ருதன் ஸ்வப்நத்தில் நியமனம் ஸாதித்ததின் பேரில் தனித்தனியே புறப்பட்டு, அபர்யாப்தாம்ருதன் ஸந்நிதிக்கு வந்து ஒன்றுசேர்ந்து பரஸ்பரம் நியமனமானதைச் சொல்லிக்கொண்டு அபர்யாப்தாம்ருதனை தண்டம் ஸமர்ப்பித்து நியமனம் பெற்றுக்கொண்டு இவ்விடம் வந்துசேர்ந்தோம். அடியோங்களை ஶிஷ்யர்களாக அங்கீகரித்து உபதேஶாநுஷ்டானங்களாலே ஸம்ப்ரதாயார்த்தங்களை ஶிக்ஷிக்கவேணும்" என்று ப்ரார்த்தித்து, தேவமிவாசார்யம் உபாஸீத என்கிறபடியே ஸ்வாமியை அபர்யாப்தாம்ருதனாகவே பாவித்து நிரஸ்த ஸமஸ்தாஹங்காரர்களாய் பக்திபாராவநமித சிரஸ்கர்களாய் தண்டம் ஸமர்ப்பித்து நிற்குமளவில், ஸ்வாமியும் தமக்கு ஆராவமுதன் நியமனப்படி இவர்கள் வந்ததையும், இவர்களுடைய ப்ரஹ்மதேஜஸ்ஸையும், யதிதர்ம ஸமுச்சயோக்த ஸங்கேதரஹித ஸ்வாஶ்ரம விஹித தர்மாநுஷ்டான நையத்யத்தையும் ஸாத்விகதையையும், ஸத்புத்திஸ்ஸாதுஸேவீ என்கிற ஶ்லோகோக்த ஶிஷ்யகுணபூர்த்தியையும்

கடாக்ஷித்து பகவந்நியமனப்படி இவர்கள் ஸ்ரீமந் நாதமுனி - ஸ்ரீமத் யாமுனமுனி - ஸ்ரீமத் ராமாநுஜமுனி ரூபர்களான பூர்வாசார்யர்களின் அம்ஸபூதர்கள் தானென்று நிஸ்சயித்து ஆராவமுதாழ்வானுக்கு இந்த ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனத்திலிருக்கிற த்வரையைத் திருவுள்ளம் பற்றி ஆஸ்சர்யத்துடன் அவர்களைத் திருக்கண்களால் குளிரக்கடாக்ஷித்து நீங்கள் இவ்விடத்திற்கு வரப்போகிற விஷயம் ஸ்ரீமதபர்யாப்தாம்ருதன் நியமனத்தாலே பூர்வமே நமக்கு விதிதம் ஆகிலும் ஸம்வத்ஸ்ரம் ததர்த்தம்வா மாஸத்ரயம் அதாபிவா । பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோவதேத் ॥ என்கிற ஶாஸ்த்ரார்த்தப்படியே ஆறு மாஸமாவது யதாவஸ்திதமான குருகுலவாஸம் செய்தபிறகுதான் ப்ரவசனம் செய்வது எம்பெருமானுக்குத் திருவுள்ளமாயிருக்குமென்று நியமிக்க அதைக்கேட்டு அந்த மும்முனிகளும் ஸ்வாமியினுடைய ஶாஸ்த்ரவஶ்யதையைப்பார்த்து ஆஶ்சர்யப்பட்டு நியமனப்படியே "அநுக்ராஹ்யா தாஸா:" என்று ப்ரார்த்தித்து ஆறு மாஸ காலம் ஶாஸ்த்ரோக்த நியமங்களுடன் குருகுலவாஸம் செய்துகொண்டு இங்கித சேஷ்டிதங்களால் ஸ்வாமி திருவுள்ளத்தைத் தெரிந்து ஆஶ்சர்யமான ஶுஶ்ரூஷை பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஸ்வாமி நியமனப்படி ஆறு மாஸ காலமானவுடனே, உபநிஷத்துகளில் ஸோஹம் பகவஶ்ஶோசாமி என்று பூமவித்யையிலும், உபகோஸல வித்யாதிகளிலும் ஸா ஹாநிஸ் தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா । யந் முஹூர்த்தம் க்ஷணம்வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே ॥ உண்ணா நாள் பசியாதவதொன்றில்லை இத்யாதிகளிலும் சொல்லுகிறபடியே ப்ரஹ்மவித்யா - அலாபத்தால் அத்யந்தமவஸந்நர்களாய், ஶ்ருதாத் அந்யத்ர ஸந்துஷ்ட: தத்ரைவச குதுஹலீ । பரமாத்மநி யோ ரக்த: அவிரக்தோ<sup></sup>஽பரமாத்மநி ॥ என்கிற அவஸ்தையை உடையவர்களாய் இனி அடியோங்களைக் கடாக்ஷித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கத் திருக்குடந்தைதேஶிகனும் இம்முனிவர்களுடைய ஶிஷ்யகுண பூர்த்தியையும் வேதாந்த க்ரஹணோபயுக்தமான தர்க்க வ்யாகரண மீமாம்ஸாத்யங்க ஶாஸ்த்ர ஜ்ஞான வைத்ஶத்யதையும் கடாக்ஷித்து ஸந்தோஷித்து அங்கீகரிக்க அவர்களும் ப்ரஹ்மவித்யா ப்ரதிபந்தக நிவ்ருத்யர்த்தம் காவேரீ ஸ்நானாதிகளைச் செய்து, கார்பண்யதோஷோப ஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாதர்ம ஸம்மூடசேதா: । யச் ஶ்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹிதந்மே ஶிஷ்யஸ்தே஽ஹம் ஶாதிமாம் த்வாம் ப்ரபந்நம் ॥ என்கிற ஶ்லோகத்தால் நாரிகேள ஸமர்ப்பண பூர்வகமாக வண்துவராபதி மன்னனை அர்ஜூனன் வரித்தாப்போலே ஸ்வாமியை ஆசார்யராக வரித்து ப்ரதமம் ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேஶித்துக்கொண்டு ஸாளக்ராம ரூபியாயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீஹயக்ரீவனைத் தாங்கள் நியதமாக மந்த்ர ஜபத்துடன் ஆராதித்துக்கொண்டு ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா வ்யாக்யாநரூப ஆஹ்நிக

க்ரந்தத்தையும் அநந்தரம் ஸங்க்ரஹ ரஹஸ்யங்களையும், ஸாராஸ்வாதிநீ ஸஹித ஸ்ரீமத் ரஸ்யத்ரயஸாரத்தையும், ஸ்வாமியாலருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஜயந்தீ நிர்ணயம், நிக்ஷேபசிந்தாமணி ப்ரப்ருதி க்ரந்தங்களையும் தாத்பர்யசந்த்ரிகா - கீதார்த்த ஸங்க்ரஹ ஸஹித கீதாபாஷ்யத்தையும், அநந்தரம் வேதாந்ததீப பூர்வகமாக ஶ்ருதப்ரகாஶிகா தத்வடீகா யுக்த ஸ்ரீபாஷ்யத்தையும் ஸாக்ஷாத் ஸ்வாமியருளிச்செய்த இருபத்திநாலாயிரப்படியும், பதினெண்ணாயிரப்படி த்ரமிடோபநிஷத்ஸார - தாத்பர்ய ரத்னாவளீ ஸஹிதமாக ஆறாயிரப்படியாகிய ஸ்ரீபகவத்விஷயத்தையும், அதிகரண ஸாராவளி - தத்வமுக்தாகலாப - ந்யாயஸித்தாஞ்ஜந - ந்யாயபரிஶுத்தி - ஸர்வார்த்த ஸித்தி - ஶததூஷண்யாதி க்ரந்தங்களையும் ஆசார்யமுகமாக ஆஶ்சர்ய பூதாநேகார்த்தத்துடன் யதாவஸ்திதமாக காலக்ஷேபஞ்செய்தருளி ஸ்வாமி உபந்யஸித்த ப்ரகாரம் சிந்தனை செய்தருளி "பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்" என்கிற ஶ்ருதியின்படியே குலம் ரூபம் வித்யா தநம்ச மதயந்த்யமும் | என்கிற குல-அபிமாந வித்யாபிமாநாதி தோஷங்களன்றியில், ஸ்ரீமதபர்யாப்தாம்ருதன் திருவடிகளில் திருக்குடந்தைதேஶிகனாலே ஸமர்ப்பிதபரர்களாய் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாந பரிபூர்ணர்களாய், ஸம்பாவநா யஸ்ய ஹி காலகூடஸ் ஸபாபுஜங்கீ குணபம் தருண்ய: | என்கிறபடியே ஸ்வமாஹாத்ம்ய கோபநபரர்களாய், அஶிதிலகுருபக்தி: தத்ப்ரஶம்ஸாதி ஶீல:, ஆஸ்திக்யவாந்நிஶிதபுத்தி: என்கிற ஶ்லோகத்தின்படியே க்ருதஜ்ஞர்களாய் வர்த்தித்தார்கள். இப்படி இவர்கள் காலக்ஷேபம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் திருக்குடந்தையிலே எழுந்தருளியிருந்த ப்ரஹ்மவித்துக்கள் ஸ்வாமி ஆஶ்ரமத்திற்கு எழுந்தருளி ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிக்கும் வைகரியையும், இம்முனிவர்களின் ஶாஸ்த்ரவஶ்யதையையும் நிஸ்ஸங்கேதாநுஷ்டான ப்ரக்ரியையையும் ஸேவித்து "திருக்குடந்தை தேஶிகன் தேஶிகாம்ஶமே. இவர்களும் முநித்ரயாம்ஶபூதர்கள் தாம்" என்று நிர்ணயித்தார்கள்.

இப்படியிருக்கிற காலத்திலே ஸ்ரீமதபர்யாப்தாம்ருதன் ஸந்நிதியில் அத்யயந உத்ஸவம் சாற்றுமுறை தினம், ஸ்வாமி மூன்று யதிகளுடன் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாஶாஸனம் செய்யுங்காலத்தில் ஆராவமுதனும் நம் க்ருஷி பலித்ததென்று திருவுள்ளமுகந்து திருக்குடந்தை தேஶிகனைக் குளிரக்கடாக்ஷித்து "முநித்ரய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்" என்கிற திருநாமத்தை அர்ச்சகமுகேந நியமிக்க ஸ்வாமியும் நாயிந்தே என்று திருவடிதொழுது தந்யோஸ்மி என்று அநுஸந்தித்து துளஸீ பாதோதகாதிகளையும் ஸ்வீகரித்து க்ருதார்த்தராய், பெருமாளிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு ஶிஷ்யர்களுடன் ஸ்வாஶ்ரமமேற எழுந்தருளினார். அதுமுதல்

அங்கிருந்த ப்ரஹ்மவித்துக்கள் எல்லோரும் "முநித்ரய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்" என்று போரக் கொண்டாடினார்கள்.

பிறகு திருக்குடந்தைதேஶிகனும் பாத்ரஸ்தமாத்மஜ்ஞாநம் ச க்ருத்வா என்கிற படியே ஸச்சிஷ்யர்களாக, பகவான் ஸங்கல்பித்தபடியை அநுஸந்தித்துக்கொண்டு ஹ்ருஷ்டமநஸ்கராய் இவர்களைக்கொண்டு இனி இந்த ஸம்ப்ரதாயத்தை விஶேஷமாய் ப்ரவசனம் செய்விப்பிக்கவேண்டுமென்று திருவள்ளம் பற்றி இந்த மூன்று யதிகளையும் வேதமநூச்ய ஆசார்யோऽந்தேவாஸிநம் அநுஶாஸ்தி ஸத்யம் வத । தர்மம் சர । ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் । என்கிற ஶ்ருதியின்படியும், உடையவர் நியமனப்படியும் ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: என்கிற க்ரமப்படியும் ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பிக்கையாகிற முக்ய கைங்கர்யத்தை லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீரங்காதி திவ்யதேஶங்களிலிருந்து அநுஷ்டிக்கும்படி நியமித்தார். அவர்களும் அந்நியமனத்தைச் சிரஸாவஹித்து ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி, பெரியபெருமாளைத் திருவடிதொழுது ப்ரவசனம் செய்து வருங்காலத்தில் ரஹஸ்யத்ரயத்தில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொன்றிலே நோக்கு என்று அருளிச்செய்த க்ரமப்படி நாதமுனிகளுடைய அம்ஶபூதரான ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன் முந்தி நாதமுனிகள் எழுந்தருளியிருந்தபடி பகவத்விஷயார்த்த அநுஸந்தானத்திலும் பகவத்த்யானத்திலும் திருவுள்ளமாழ்ந்து கேவல பகவதநுபவ பரராய் ஶிஷ்யர்களை விஶேஷமாக க்ரஹித்து ப்ரஹ்மவித்யா தாநத்திற்கு அதிக அவகாஶமில்லாததினால் ஸ்வல்ப ஶிஷ்யர்களுக்கு மாத்ரம் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளி ஆத்மாராமராய் எழுந்தருளியிருந்தார்.

ஆளவந்தாருடைய அம்ஶபூதரான ரங்கநாத மஹாதேஶிகன் முந்தி ஆளவந்தார் எழுந்தருளியிருந்ததுபோல் மீமாம்ஸாஶாஸ்த்ர யுக்மச்ரமவிமலமநா ம்ருக்யதாம் மாத்ருஶோऽந்ய: । என்கிறபடியே ப்ரவீணராய் ஸ்ரீபாஷ்ய விஶேஷார்த்தாநுஸந்தாந - ப்ரதிவாதி நிரஸன - ப்ரதானராகத் தாம்ரபர்ணீ தீர திவ்யதேஶங்களில் ஏகாந்தவாஸ ஶீலராய் ஸ்வல்ப ஶிஷ்யர்களுக்கு மட்டும் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய அம்ஶபூதரான வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகன் மட்டும் ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸம் பண்ணிக்கொண்டு ஸ்வாமி நியமனப்படி முந்தி ஸ்ரீபாஷ்யகாரர் "ஶரணாகத ஸார்த்தவாஹமீடே" என்னும்படி எழுந்தருளியிருந்தது போல அநேக ஸச்சிஷ்யர்களுக்கு விஶேஷமாய் உபயவேதாந்த ப்ரவசனம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஒரு காலவிஶேஷத்தில் திருக்குடந்தை தேஶிகன் தம்மாசார்யரான ஸாக்ஷாத் ஸ்வாமிக்குத் திருநக்ஷத்ரம் செய்தருளும் காலத்தில் ஸ்வாமி ஸந்நிதிக்கு மூன்று யதிகளுமெழுந்தருளித் தெண்டம் ஸமர்ப்பித்து பத்தாஞ்ஜலிபுடர்களாய் நிற்க ஸ்வாமியும் அந்த யதிகளை கடாக்ஷித்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செவ்வையாக நடக்கிறதாவென்று நியமிக்க, ஸ்ரீநிவாஸ ஸ்வாமி, ஸ்ரீரங்கநாத ஸ்வாமி, இந்த இரண்டு திருநாமங்களும் அடியோங்கள் அவ்விடத்து நியமனத்தைப் பூர்ணமாக நடத்தமுடியவில்லை. ஸ்வல்ப ஶிஷ்யர்களுக்கு மாத்ரம் ப்ரவசனம் செய்தோமென்று விஜ்ஞாபிக்க, ஸ்வாமி வேதாந்தராமாநுஜ ஸ்வாமி திருமுகத்தை கடாக்ஷிக்க, அடியேன் நியமித்த தினம் முதல் இந்த ப்ரவசனத்தையே அங்கியாக வைத்துக் கொண்டு அநுஷ்டித்துவருகிறேன். அநேகர்கள் அந்த கடாக்ஷத்தால் நம்முடைய ஸம்ப்ரதாய நிஷ்ணாதர்களாக அபிவ்ருத்தியாகியிருக்கிறார்கள்" என்று விஜ்ஞாபிக்க - திருக்குடந்தை தேஶிகனும் முந்தி நாதமுனிகள், ஆளவந்தார் எழுந்தருளியிருந்தது போல் அந்த அம்ஶபூதர்களான இரண்டு பேர்களும் ஸ்வாநுபவ ப்ரதானர்களாக இருந்துவிட்டார்கள். நீர் ப்ரவசன ப்ரதானராகவிருப்பதால் உமக்கு பகவந்நியமனப்படி பாஷ்யகாராம்ஶம் என்பது நன்றாக ஒக்கும்" என்று அநுக்ரஹித்துத் திருக்கோட்டியூர் நம்பி போல் ஸம்ப்ரதாயகோபநப்ரதானராக இருந்து ஸத்பாத்ரங்களைக் கூட விஶேஷ பரீக்ஷை பண்ணி நிராகரிக்காமல் கருணாப்ரதானராய் பாஷ்யகாரர் போல் ப்ரவசனத்தினால் ஸம்ப்ரதாயத்தை விஶேஷாபிவ்ருத்தி பண்ணும் என்று நியமித்து அருளினார். உடனே மற்ற இரண்டு யதிகளும் அவ்விடத்தில் நியமித்தபடி ஸ்ரீபாஷ்யகாராம்ஶமான வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகன் மூலமாக ஸம்ப்ரதாயம் வ்ருத்தியடைவதுதான் அபர்யாப்தாம்ருதன் திருவுள்ளமாகையால் அப்படியே ஆகவேணுமென்று முந்தி நாதமுனி - ஆளவந்தார்கள் எப்படி உடையவர் முகமாய் ஸம்ப்ரதாய ப்ரவசனத்தைத் திருவுள்ளம் பற்றினார்களோ அந்தப்படியே இப்பவும் இந்த ஸ்வாமி மூலமாக ஆகவேணுமென்று திருவுள்ளம் பற்றினார்கள்.

பின்பு திருக்குடந்தை தேஶிகனுக்கு வடதிசையிலிருக்கிற திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்யத் திருவுள்ளமிருந்ததால், ஸ்வாமியுடன் கூட மூன்று யதிகளும் அநேக க்ருஹஸ்தாஶ்ரம சிஷ்யர்களும் அநுயாத்ரையாக எழுந்தருள ஆராவமுதன் நியமனம் பெற்றுக் குருகைக்காவலப்பன்கோயிலில் வேதநாராயணனை தண்டம் ஸமர்ப்பித்து வீரநாராயணபுரத்தில் நாதமுனி - ஆளவந்தார்களை அடி பணிந்து ஸ்ரீமுஷ்ணத்தில் அம்புஜவல்லியாரையும், வராஹநயினாரையும் திருவடி தொழுது திருக்கோவலூர் எழுந்தருளி முதலாழ்வார்கள் புருஷகாரமாக ஆயனாரை ஸேவித்து அங்கு நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருமாளிகை ஸ்தலத்தையும்

ஸேவித்து அங்குநின்றும் புறப்பட்டு அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சீ ஹ்யவந்திகா । புரீ த்வாரவதீ சைவ ஸப்தைதே முக்திதாயகா: ॥ என்றும் முத்திதரு நகரேழில் முக்கியமாம் கச்சி தன்னில் என்றும் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா என்றும் தேஶிகன் போரவுகந்தருளின நிலமான பெருமாள்கோயிலேற எழுந்தருளித் திருவனந்த ஸரஸ்ஸிலே நீராடியருளி அத்தியூரானை அடிபணிந்து பெருந்தேவித் தாயார் புருஷகாரமாக தேவப்பெருமாளை மங்களாஶாஸனம் செய்தருளி அம்மாள் கோஷ்டியை அடிபணிந்து பெருந்தேவித்தாயார் புருஷகாரமாகத் தேவப்பெருமாளை மங்களாஶாஸனம் செய்தருளி அங்குத் தூப்புல் தேஶிகனையும்

அகில புவநரக்ஷா ஸாதநாயாவதீர்ணே
குமதிகலிவிலாஸத்வாந்த திக்மாம்ஶுஜாலே ।
நிரவதி கருணாப்தௌ வேதசூடாகுரௌ மே
பவது பரமபக்திஸ் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரே ॥

என்று அநுஸந்தித்து தண்டம் ஸமர்ப்பித்து அவ்விடத்தில் வஸிக்கும் காலத்தில் மூன்று யதிகளும் இதர ப்ரஹ்மவித்துக்களான க்ருஹஸ்தாஶ்ரம ஶிஷ்யர்களும் காலக்ஷேபம் செய்துகொண்டிருப்பதையும் அவ்விடத்திலுள்ள ப்ரஹ்மவித்துக்கள் எல்லோரும் வந்து தெண்டம் ஸமர்ப்பித்து அபர்யாப்தாம்ருதன் நியமனத்தாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட இந்த விலக்ஷண முநித்ரய ஸம்ப்ரதாய ப்ரபாவத்தையும், ஸ்வாமியினுடைய ஸாத்விகதா - ஜ்ஞாத்ருத்வ - ஶ்ரைஷ்ட்யாதிகளையும் ஸேவித்து ஆஶ்சர்யப்பட்டு நிகமாந்ததேஶிக ஸம்ப்ரதாயத்தில் இப்படிப்பட்ட ஜகதுத்தாரக ஸம்ப்ரதாயம் ஸதாசார்ய பரம்பரையில் காலதத்வமுள்ளதனையும் விஶேஷமாக அபிவ்ருத்தியாகவேணுமென்று மங்களாசாஸனம் செய்து ஸ்வாமி ஸந்நிதியில் அநேகர்கள் ஆச்ரயித்து ஸம்ப்ரதாயக்ரஹண பரஸமர்ப்பணாதிகளைச் செய்து கொண்டார்கள்.

பிறகு ஸ்வாமியும் அங்குநின்றும் புறப்பட்டுத் திருவேங்கடமெழுந்தருளி ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: என்று திருவேங்கடமாமலையை நோக்கி அஞ்ஜலி பண்ணித் திருச்சானூரில் தாயாரையும் கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜனையும் அடிபணிந்து ஆழ்வார் தீர்த்தத்தில் நீராடி நம்மாழ்வார் முதலானோரையும் அடிபணிந்து திருமலையேறி வழியில் எம்பெருமானாரை யதிராஜஸப்ததியை அநுஸந்தித்து அடிபணிந்து திருக்கோபுர திவ்யவிமாநாதிகளையும் ஸேவித்துத் திருவீதி ப்ரதக்ஷிணமாக ஸ்வாமிபுஷ்கரிணியில் நீராடி ஜ்ஞானப்பிரானை வணங்கி லக்ஷ்ம்யம்ஶமான சம்பகவ்ருக்ஷாதிகளை ஸேவித்துக் குலசேகரன் படியருகே நின்று,

அகலகில்லேன் என்கிற பாட்டையும் அநுஸந்தித்துத் திருவடிதொழுது திவ்யமங்கள விக்ரஹத்தையும் திவ்யமஹிஷீ பூஷணாயுதங்களையும் தண்டம் ஸமர்ப்பித்து திவ்ய கல்யாணகுணங்களை தயாஶதகத்தாலே அநுஸந்தித்து ஹர்ஷாபூரித ஹ்ருதயராய் நிற்க, திருவேங்கடமுடையானும் போரவுகந்தருளி, தீர்த்தம் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்து நம் தேஶிகனைப்போல் ஸம்ப்ரதாயாபிவ்ருத்தி பண்ணக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந நியமித்து விடைகொடுத்தருள, ஸ்வாமியும் க்ருதார்த்தராய் அங்குச் சிலநாள் எழுந்தருளியிருந்து அங்கு ஆஶ்ரயித்த ஶிஷ்யர்கட்கு விஶேஷார்த்தங்களை அநுக்ரஹித்து ப்ரஶமிதகலிதோஷாம் என்று மங்களாசாஸனம் செய்தருளித் திருமலையில் நின்றுமிழிந்து வடதிசையிலுள்ள மதுரா - அயோத்யா - த்வாரகா - புருஷோத்தம - பதரிகாஶ்ரம - ஸ்ரீகூர்ம - மங்களகிரி - ஸிம்ஹாசலாதிகளை திக்கு நோக்கித் தெண்டம் ஸமர்ப்பித்து மீண்டு, திருவள்ளூரில் வீரராகவனையும், திருவல்லிக்கேணியில் பார்த்தஸாரதியையும் மங்களாசாஸனம் செய்தருளி, பின்பு அங்குநின்றும் திருநீர்மலை முதலிய திவ்யதேசங்களிலே எம்பெருமானை அடிபணிந்து திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளி கங்காதிகாம் விததீம் என்கிற கருடநதியில் நீராடி தேஶிகனுடைய திருமாளிகையைத் தெண்டனிட்டு தேவாதிநாதன் ஸந்நிதியைக்கிட்டி வலமாக எழுந்தருளி, ப்ரக்யாதமௌஷதகிரிம் ப்ரணமந்திதேவா: । என்கிற ஔஷதாத்ரியிலேறியருளி தேஶிக ஜபஸ்தானமாகிய அஶ்வத்தத்தை ஸேவித்து அங்குள்ள வேணுகோபாலன், ஹயக்ரீவன், அழகியசிங்கர் இவர்களை ஸேவித்துக் கீழே இழிந்து கோயிலுக்குள் சென்று ஸேவாக்ரமமாக தேஶிகன் ஸந்நிதியிலெழுந்தருளித் தெண்டம் ஸமர்ப்பித்து.

பாஷ்யாப்திமதிகம்பீரம் உந்மத்த்யாம்ருத முத்தமம் ।
மாத்ருக்ப்யோऽபி ப்ரயச்சந்தம் நிகமாந்தகுரும் பஜே ॥

என்றநுஸந்தித்துத் தீர்த்த ப்ரஸாதாதிகளைப் பெற்று மீண்டு ஸேவாக்ரமமாக தேவநாதன் ஸந்நிதியில் சென்று அச்யுதஶதக தேவநாயக பஞ்சாஶத்துக்களை அநுஸந்தித்துத் தெண்டம் ஸமர்ப்பித்துத் தீர்த்தாதிகளைப் பெற்றுத் தேஶிகன் எழுந்தருளியிருந்த ஸ்தலமாகையாலே சிலநாள் அங்கெழுந்தருளியிருந்து அநேகம் ஶிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்தருளி அங்குநின்றும் புறப்பட்டுத் திருசித்திரகூடம் முதல் தேரழுந்தூர் வரையிலுள்ள திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்தருளித் திருக்குடந்தைக்கெழுந்தருளி ஆராவமுதனை மங்களாசாஸனம் பண்ணி விடை பெற்று ஆச்ரமத்திற்கெழுந்தருளி ஆச்ரயித்த சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். இவ்வர்த்தத்தை அங்குள்ளோர்,

யத்பாத பங்கஜ ஸமாச்ரயணைக பூம்நா
ஸந்ந்யாஸிஷு த்ரிஷு மஹத்ஸு ஸதா த்விஜேந்த்ரா: ।
ஸத்தேசிகத்வதிய மாகலயந்தி தாத்ருக்
கோபாலதேசிக பதாம்புருஹம் ஸ்மராமி ॥
வேதாந்த விஜ்ஞாந ஸுநிஸ்சிதார்த்தா:
ஸந்ந்யாஸயோகாத் யதய: பரே ச ।
யச்சிஷ்யவர்க்கா புவநம் புநந்தி
கோபாலஸூரிம் தமஹம் ப்ரபத்யே ॥
ஸம்ஸேவிதஸ் ஸம்யமிநாம் த்ரயேண
மஹர்ஷிதுல்யை ரமிதைர் க்ருஹஸ்தை: ।
அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தை:
ஸ்ரீகும்பகோணே குருரேததே஽ஸௌ ॥

தத்தாருக்வாதிஹம்ஸாம்புத குலதிலகஶ் ஶர்வகுர்வர்ஹதாதி-
ப்ரோத்யத் துர்வாதிகர்வாநல நவஜலதோல்லாஸக்ருத் வாக்விலாஸ: ।
ஜீயாத் கோபாலஸூரி: ப்ரவரகுணகணாநல்ப ஶீலாநுபாவ:
கல்பத்ருஸ் ஸம்ஶ்ரிதாநாம் ப்ரணதபரமஹம்ஸா வதம்ஸாங்க்ரி பத்ம: ॥

ஸ்ரீமத்வேங்கடநாத தேசிகமணி: ஸ்வேந ப்ரதிஷ்டாபிதாம்
கோபாயந் பதவீம் ஸ்வதேசிக க்ருபாதீநஸ்ததீயாந்வயே ।
ஆவிர்பூய விவர்த்தயந் அதிகதம் ஸத்ஸம்ப்ரதாயம் பபௌ
கோ஽பி ஶ்ருத்யவதம்ஸலலக்ஷ்மணமுநேர் கோபால ஸத்தேசிக: ॥

ஸ்ரீமாந் கோபாலஸூரிர் ஹயவதந க்ருபாலம்பிதாஶ்சர்ய பூமா
ப்ரஜ்ஞா சாரித்ர ஶாந்தி ப்ரப்ருதி குஸும ஸந்தாந கல்பத்ருமஸ்தாத்
த்ரையந்தார்யாவதாரஸ் ஸகலநதஜநோஜ்ஜீவநே பத்ததீக்ஷ:
யச்சம்ஸ்த்ரிப்யோ முநிப்யஶ் ஶ்ருதிமகுடகுரோஸ்ஸம்ப்ரதாயம் ஶ்ரியை ந: ॥

இத்யாதிகளாலே அநுஸந்தித்ததுந்தவிர வேதாந்தலக்ஷ்மணமுநீந்த்ரதயா஽வதீர்ணே ப்ராப்தும் குரௌ யதிபதௌ கலு ஶிஷ்யாவம் । பக்த்யாகமாந்த குருரேவ யதாத்மாநா஽பூத் கோபாலதேசிகமணிம் தமஹம் ப்ரபத்யே ॥ என்கிறபடியே முந்திய அவதாரத்தில் பாஷ்யகாரருக்கு ஸாக்ஷாத் சிஷ்யராக இருக்க நேரிடாத குறையை நிவர்த்தி பண்ணும் பொருட்டு பாஷ்யகாராம்சமான ஸாக்ஷாத் ஸ்வாமியினுடைய சிஷ்யராக வேண்டியதற்காக தேசிகனே மறுபடியும் கோபாலதேசிகனாக அவதரித்தாரென்றும் அநுஸந்தித்தார்கள்.

அக்காலத்தில் ஜநித்திருந்த குமாரத்தியை மமாயம் பாலதந்வீதி மஹத்யா க்ருபயா ஸ்வயம் । யமாஹஸ்வாநுவ்ருத்த்யைவ யதிராஜோऽதிதோஷித: ॥ என்கிறபடியே உடையவராலே இளையவில்லி என்று திருநாமம் பெற்றவராயும் ஸ்ரீ கௌசிக குல திலகராயும் குமாண்டுர் பிள்ளையான இராமானுஜாசார்யர் திருவம்சத்திலே அவதரித்தவராயும் திருப்புட்குழியிலே முந்தி வஸித்துப் பிறகு ஆராவமுதனுடைய நியமனத்தாலே திருக்குடந்தையிலே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு அமுதனுக்குத் திரு ஆலவட்டம் கைங்கர்யம் செய்துகொண்டிருந்த வேங்கட வீரராகவாசார்யர் குமாரரான ஸ்ரீநிவாஸாசார்யருக்குக் கன்யகாதானம் செய்து அக்குமாரத்தியினிடம் அவதரித்த தௌஹித்ரராகிய பரமைகாந்த்யக்ரேஸரரான வேதாந்தாசார்யர் தம்மிடத்தில் நிரதிசயபக்தியுடன் சிஷ்யராக ஆச்ரயித்தவளவிலே அவருக்கு ஸர்வ அர்த்தங்களையுமுபதேசித்து பரஸமர்ப்பணமும் செய்தருளினார்.

இப்படியிருக்கிற காலத்திலே சிஷ்யர்களுடன் திருவணையில் நீராடத் திருவுள்ளமாய்ப் புறப்பட்டுத் திருவிண்னகர், திருநறையூர், திருச்சேறை முதலிய திவ்யதேசங்களில் எம்பெருமானை ஸேவித்து ஸ்ரீராமக்ஷேத்ரமென்ற வடுவூர் எழுந்தருளி அங்கு ஆசார்யரான ஸாக்ஷாத் ஸ்வாமியினுடைய ஆச்ரமத்தை தண்டம் ஸமர்ப்பித்து உள்ளே புகுந்து ஆசார்ய ஜபஸ்தான - பகவதாராதந ஸ்தான - ஶயந ஸ்தானாதிகளை ஸேவித்து க்வசிந்நிப்ருதமுபவிஶ்ய ஜபாதிகளைச் செய்தருளி, ஸ்ரீராமனைத் திருவடி தொழப் புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி ஸேவாக்ரமமாக உள்ளே புகுந்து ரகுவீரகத்யத்தை அநுஸந்தித்து, கற்பாரிராமபிரானையல்லால் என்கிற திருவாய்மொழியையும் அநுஸந்தித்துச் சக்ரவர்த்தித்திருமகனைத் திருவடிதொழுது தீர்த்தாதிகளைப் பெற்று ஆநந்தபரிதராய் விடைபெற்று, ஆசார்யாச்ரமத்துக்கெழுந்தருளி தேநைஷ பூர்வமாக்ராந்த ஆஶ்ரமஶ்ஶ்ரமநாஶந: । மயாபி பக்த்யா தஸ்யைஷ வாமநஸ்யோபபுஜ்யதே ॥ என்றாசார்ய பரிக்ருஹீதம் என்கிற அபிமானத்தாலேயும் தத்வஸ்து வாஸ்த்வாதிகேऽபி என்கிற ஶாஸ்த்ரத்தாலும் அங்குச் சிலநாள் எழுந்தருளியிருந்து ப்ரவசனம் பண்ணி ராஜமன்னார் ஸந்நிதியில் கோபாலனையும் அடிபணிந்துத் திருவணையாடி மீண்டு, திருமாலிருஞ்சோலை, திருமோகூர் முதலிய திவ்யதேசங்களில் பெருமாளை ஸேவித்து மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி முதலியதுகளில் பெருமாளையும், ஆழ்வாரையும் அடிபணிந்துத் தொலைவில்லிமங்கலம், வரகுணமங்கை முதலிய திருப்பதிகளிலும் மங்களாஶாஸனம் பண்ணி மீண்டு திருக்குடந்தைக்கெழுந்தருளி ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளுங்காலத்தில் ஶிஷ்யைருபாதாநபரைரநந்யை: ஸமர்ப்பிதம் பக்தி புரஸ்ஸரம் யத் என்று தேசிகன் விஷயத்தில் சிஷ்யர்கள் ஸமர்ப்பித்த த்ரவ்யத்தை

தேசிகன் திருவுள்ளம் பற்றினாப்போலே தாமும் திருவுள்ளம் பற்றி அந்த த்ரவ்யத்தைக்கொண்டு ஆராவமுதன் திருமார்பிலே ஸதா தரிக்கும்படி லக்ஷ்மீ பதக்கமும், தேசிகன் ஸந்நிதி திருக்கோபுரம், திருக்கதவு, திருப்ரபைகளையும் செய்வித்து ஸமர்ப்பித்தருளினார்.

ஜீவாநாம்நிகரைரிவ ப்ரபதநோந்நீதஸ்வரூபைர் மணி -
ஸ்தோமை ருஜ்ஜ்வலமிந்திரா பரிலஸந் மத்யம் விவஸ்வத் ப்ரபம் |
ஸ்ரீகோபால குரூத்தமார்ப்பித மபர்யாப்தாம்ருதோரஸ்திதம்
லக்ஷ்மீபூஷணநாமகம் விஜயதாத் ஆகல்ப மாகல்பகம் ||

என்று அங்குள்ளார் அநுஸந்தித்தார்கள்.

பிறகு ஒருகால் திருக்குடந்தை தேசிகனுடைய வார்த்தக தசையில் ஸ்ரீமத் அபர்யாப்தாம்ருதனுடைய நைமித்திகமான திருப்ரதிஷ்டை செய்யும்படி நேர்ந்த காலத்தில் அதற்கங்கமான மஹாபாகவத கரஸ்பர்ஶம் செய்யவேண்டிய ஸமயம் வந்தவாறே, இந்த திவ்யமங்களவிக்ரஹத்தை ஸ்பர்ஶித்து மங்களாசாஸனம் பண்ணத்தக்க பரமைகாந்தி யாரோவென்று த்ரிமதஸ்தர்களான ஸகல மஹான்களும் திகைத்துநிற்குமளவில் ஸ்ரீஆராவமுதன் அர்ச்சகமுகமாய் நம் திருக்குடந்தை தேசிகனை அழைத்துவாருங்கள் என்று நியமிக்க ஸந்நிதியிலிருந்த மஹான்கள் எல்லாரும் ஸ்ரீ நிகமாந்ததேசிகாபராவதாரமான ஸ்வாமிக்குத்தான் இது தகுமென்று ஆச்சர்யப்பட்டு ஸந்தோஷித்து அனந்த கொத்துப் பரிஜனங்களுடன் ஸ்ரீஸ்வாமி ஆச்ரமத்துக்குச்சென்று தெண்டம் ஸமர்ப்பித்து இந்நியமனத்தை விஜ்ஞாபித்தவுடன் திருக்குடந்தை தேசிகனும் அடியேன் அத்யந்தாகிஞ்சனனாகவிருந்தபோதிலும் வேதாந்ததேசிகபதே விநிவேஶ்யபாலம் என்று தேசிகன் முந்தி அநுஸந்தித்தபடி தாஸனைக்கொண்டு இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்துகொள்ளும்படி ஸ்ரீஆராவமுதாழ்வானுக்குத் தம்மிடத்திலுண்டான க்ருபாதிசயத்தைத் திருவுள்ளம் பற்றி ஆஶ்சர்ய ஸாகராந்தர்நிமக்நராய் அநவதிகாதிஶய பக்திபுளகிதகாத்ரராய் ஆநந்தாஶ்ருபரிப்லுதராய் ஸந்நிதிக்கெழுந்தருளி ஆழ்வார் ஆசார்யர்களையும் ஸ்ரீகோமளவல்லி நாச்சியாரையும் தண்டம் ஸமர்ப்பித்து பிம்பாக்ருத்யாத்மநா பிம்பேஸமாகத்யாவதிஷ்டதே என்கிறபடியே அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹ ஸம்பந்தத்தோடு தேதீப்யமானராய் துக்காபாய ப்ரணயிநி ஜநே தூரதத்தாபி முக்யம் என்கிறபடியே கடாக்ஷாம்ருத நிரஸ்ததாபராய் எழுந்தருளியிருக்கிற பகவானை பாதாம்போஜம் ஸ்ப்ருஶதி பஜதே என்கிற க்ரமமாக ஆபாதசூடம் ஸேவித்து, நிரந்தரம் நிர்விஶதஸ்த்வதீயம் அஸ்ப்ருஷ்ட சிந்தாபதமாபிரூப்யம் ஸத்யம்ஶபே வாரணசைல

நாத வைகுண்டவாஸே஽பி என்று அநுஸந்தித்தாப்போல அநுஸந்தித்து ஆபாதசூடம் திருமேனியைத் தம் திருக்கைகளால் ஸ்பர்சித்து தேசிகன் அபீதிஸ்தவத்தில் பரஸ்பர ஹிதைஷினாம் பரிஸரேஷு மாம் வர்த்தய என்றருளிச்செய்தாப்போல ஸ்வாமியும், இக்குடந்தையில் கலாபாத்யுபத்ரவ - விருத்தமதஸ்தோபரோதாதிகளும், யத்ர அஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே । ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா: ॥ என்கிறபடியே ஆந்தர பாஹ்யங்களான வ்யாதிகளும் நிவர்த்தித்து செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை என்கிற ஆழ்வார் மங்கள ஆஶாஸனத்தின்படியே இந்தத் திவ்யதேசம் நிகமாந்தமஹாதேசிக திவ்ய ஸம்ப்ரதாயஸ்தர்களாயும் ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யாதி ஸம்பத்ஸம்ருத்தர்களாயும், அகண்டிதாஷ்டவித ஸ்ரீபரிபூர்ணர்களாயும் விளங்குகிற ப்ரஹ்மவிதக்ரேஸர - ஸங்க பரிவ்ருதமாய், பகவந் நித்யாராதந பவித்ரோத்ஸவ ப்ரஹ்மோத்ஸவாதிகளும், தேசிக திவ்யோத்ஸவாதிகளும் உத்தரோத்தரமபிவ்ருத்தமாய்க் கால தத்வமுள்ளதனையும் நடந்தேறிவரும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்று

சடரிபுமுநிஸூக்தி ஸ்ரீமதாம்நாயவாசாம்
அக்ருதகவசநாநாம் சாதிகல்யாணகோஶை: ।
அநுதிநமபிவ்ருத்தாம் ஆகமாந்தார்ய ஸூக்த்யா
ஶ்ரியமுபசிது ஶார்ங்கிந்! வைதிகே஽ஸ்மிந்விமாநே ॥
பஶ்யேம ஶார்ங்கிந் ஶரதாம் ஶதம்த்வாம்
பர்யாப்திஹீநாம்ருத நாமதேயம் ।
ஸ்ரீகும்பகோணே நகரோத்தமே஽ஸ்மிந்
நிர்வ்யாகுலாஶ்சைவ நிராமயாஶ்ச ॥
மஹித விஹித வேதாந்தார்ய ஸம்மாநஶீலாம்
அபகத ததமித்ராம் அத்புதைராஸமேதாம் ।
நிரவதிதநதாந்யாம் உத்ஸவைஸ்த்யாநஹர்ஷாம்
ஶ்ரியமுபசிநு ஶார்ங்கிந்! வைதிகே஽ஸ்மிந் விமாநே ॥
ஸ்ரீஶார்ங்கபாணே யதி தே பரத்வம்
ஸத்யா யதி ஸ்யாத் ஶ்ருதி ரத்ரமாநம் ।
வேதாந்தஸூரௌ த்விஷதோ ஜநாம்ஸ்த்வம்
ஸ்ரீகும்பகோணே விநிவாரயாஶு ॥

என்று மங்களாசாஸனம் செய்தருளி ப்ரார்த்தநாபூர்வக ஶரணாகதியை ஏததர்த்தமாக பகவத் திவ்யசரண நளிந விந்யஸ்த ஶிரஸ்கராய் அநுஷ்டித்து, அநுஷ்டிதப்ரபதந ஸஞ்ஜாதகருணாம்ருத ரஸநிர்ப்பர கடாக்ஷாவலோகநாம்ருத தாராபிஷிக்தராய்

மஜ்ஜ்ஞாநதர்ஶந ப்ராப்தி ஸத்ஸம்ருத்த்யாதிஷு நிஸ்ஸம்ஶய: ஸுகமாஸ்ஸ்வ என்று பகவதநுக்ருஹீதராய் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளைப் பண்ணி, வரிசைகளைப் பெற்று நிகமாந்தமஹாதேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளி அகிலபுவந ரக்ஷா ஸாதனாயாவதீர்ணே என்று தொடங்கி தேசிக கல்யாணகுண ப்ரதிபாதகமான ஸஹஸ்ரநாமத்தை அநுஸந்தித்து மங்களாசாஸனம் பண்ணி விடைபெற்று ஸ்வாச்ரமமேறவெழுந்தருளினார். இம்மங்களாசாஸன ப்ரபாவத்தால் இன்றளவும் ஸ்ரீமதபர்யாதாம்ருத நித்யாராதன மஹோத்ஸவ - நிகமாந்தமஹாதேசிக நித்யாராதன மஹோத்ஸவ - ப்ரஹ்மவிதக்ரேஸர ஸம்ருத்தி - ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசந அநுஷ்டானங்களும் குறைவற நடந்துவருகின்றன.

இப்படியிருக்கச் சிலநாள் கழித்துத் திருமேனி தளர்ந்தவாறே ஆராவமுதனை மங்களாசாஸனம் பண்ணும் காலத்தில் ஒருநாள், பெருமாள் "நீர் அவதரித்த காரியம் தலைக்கட்டினபடியால் நம் பெரியவீடு வந்துகாணும்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்ய ஸ்வாமியும் ஸ்வாச்ரமத்துக்கெழுந்தருளி, நோவு சாத்திக்கொண்டு ப்ராப்யாஸக்தியாலே அதிஹ்ருஷ்டராய் ஒருநாயகத்தின்படியே விரக்தி மேலிட்டு உண்ணிலாவியவின்படி ஐம்புலன்கள் செய்கையிலஞ்சி, யதிப்ரவர பாரதீ என்றும் நிர்விஷ்டம் என்றும் அருளிச்செய்தபடியே ஶரண்யதம்பதி தயாதீக்ஷாப்ரதீக்ஷராய் கதா கதாவென்று வாய் புலர்ந்தப்பண்ணும்படியிருக்கிற ப்ராப்யத்தில் ருசியும் த்வரையும் உடையவராய் எழுந்தருளியிருந்து தமக்கு அடைத்த எண்பத்துமூன்றாவது திருநக்ஷத்ரமான ப்லவ நாம ஸம்வத்ஸரம் கார்த்திகை மாஸம் புஷ்யநக்ஷத்ரம் புதவாஸரம் கூடின க்ருஷ்ணபஞ்சமீ மத்யாந்ஹத்தில் துரீயாஶ்ரமம் ஸ்வீகரித்து அப்போது அபர்யாப்தாம்ருதஸ்வாமியென்று திருநாமமுடையவராய் த்ரிதண்ட காஷாய பரிமண்டித விக்ரஹராய் ஸேவை ஸாதிக்கும்போது ஆராவமுதன் ஸ்வப்ந நியமனத்தாலே தௌஹித்ரரான வேதாந்தாசார்யர், ஸ்வாமி ஸந்நிதியில் ப்ரார்த்தித்து ஸ்வாமியினுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி ஸ்வாமி திருக்கைகளாலே ஸ்பர்சித்து ஸாதிக்க அதைத் திருப்ரதிஷ்டை செய்து ஆராதித்தார். மறுநாள் ஆஶ்லேஷா நக்ஷத்ரம் குருவாஸரம் கூடின ஷஷ்டி ராத்ரி ஸிம்ஹலக்நத்தில் தம் ஆசார்யரான ஸாக்ஷாத்ஸ்வாமி திருவடிகளை த்யானித்துக் கொண்டு திருவடிநிலை தீர்த்தமும் ஸ்வீகரித்து முநித்ரய ப்ரப்ருதி சிஷ்யர்களுக்குத் தம் ஸ்ரீபாததீர்த்தத்தையும் அநுக்ரஹித்துத் திருவடிநிலையையும் அநுக்ரஹித்து ப்ரஹ்மரந்த்ரம் திறந்து வைகுண்டமாநகரம் புக்கு அவாவற்று அந்தமில் பேரின்பத்து அடியரோடு துல்யசீலராய் அத்ரபரத்ரசாபியென்கிறபடியே நம் கூறு கவர்ந்த குருக்கள் குழாங்களைத் தண்டனிட்டு அவர்களுடைய அநுமதியினாலே, விதிவகை புகுந்தனர்

இத்யாதிகளின்படியே திவ்யபர்யங்கத்தைக்கிட்டி வந்தவரெதிர்கொள்ள என்றபடியே அவருடைய பரிஷ்வங்கத்துக்குமிலக்காய் அவனை அநுபவித்துக்கொண்டு, அங்குற்றைக்கு உபகரணமாய் எழுந்தருளியிருந்தார். பின்பு சிஷ்யர்களான முநித்ரயங்களும் இதர ப்ரஹ்மவித்துக்களும் ஸ்வாமி தௌஹித்ரரான வேதாந்தாசார்யரைக்கொண்டு ஆளவந்தார்படி க்ரமமாகத் திருக்காவேரி சக்ர தீர்த்தத்தில் திருப்பள்ளிப்படுத்தல் முதலான கைங்கர்யங்களைப் பரக்க நடத்திப் போந்தார்கள். இப்படித் திருக்குடந்தைதேசிகன் திருநாடலங்கரித்தவர்த்தத்தை,

ஸ்ரீமாந் கோபாலஸூரிஶ்ஶ்ருதி மகுடயுகீ ஸம்ப்ரதாயார்த்த தாநே
 சிஷ்யாநாஸ்தாப்ய பூமௌ ப்லவஶரதிரவாவூர்ஜகே க்ருஷ்ண ஷஷ்ட்யாம் ।
ராத்ர்யாம் போகீஶதாராந்வித குருதிவஸே பாஸ்ரே ஸிம்ஹலக்நே
 ஸ்வாசார்யாரூடமக்ரே பரமபதமகாந் நித்ய முக்தாநுபாவ்யம் ॥
ஸ்ரீமத்வேதாந்த ராமாநுஜ சரணாப்ஜாப்த்யபீஷ்டம் விசிந்த்ய
 ப்ராப்தௌ கோபாலஸூரௌ பரமபததலம் வத்ஸரோ஽யம் ப்லவோ஽பூத் ।
மாஸோ஽ப்யூர்ஜோ஽த பக்ஷோ ஸிததர உதகாத் அக்நிஜாதா திதிஸ்ஸ்வம்
 நக்ஷத்ரம் ஸர்ப்பதேவம் ததஸஹவிரஹாத் வாஸரோ ஜீவமாத்ரம் ॥

இத்யாதிகளாலே சிஷ்யரான முநித்ரயங்களுமநுஸந்தித்தார்கள். இப்படித் திருக்குடந்தை தேசிகன் திகந்தவிஶ்ராந்த யஶஸ்கராய் லீலாவிபூதியில் 83 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இப்போது திருக்குடந்தை முதலான திவ்யக்ஷேத்ரங்களில் அர்ச்சாரூபியாய் ஸேவை ஸாதித்து அநுக்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

ஸ்ரீக்ருஷ்ணதேஶிகபதாம்புஜ ப்ருங்கராஜம்
வேதாந்தலக்ஷ்மண முநீந்த்ர க்ருபாத்தபோதம் ।
த்ரய்யந்த தேஶிக யதீந்த்ரஶடாரி மூர்த்திம்
கோபாலதேஶிகஶிகாமணிமாஶ்ரயாம: ॥

ஸ்ரீமதே கோபாலார்ய மஹாதேஶிகாய நம:

நன்றி:

1. திருக்குடந்தை தேஶிகன் புகழ்மாலை - 2000.
2. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ராயபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ ரகுவீர மஹாதேஶிகன்.




திருவவதார நன்னாள் - புரட்டாசி பூராடம்